அபிவிருத்தி சங்கம்
மதுரை.
சபா.

# முத்துக்குவியல்

பதிப்பாசிரியர்:

தே. ப. பெருமாள்

கவிக் குயில் நிலையம், கோட்டாறு.




ஸ்நானத்திற்கும்
ஆடைகளுக்கும்
"ராயல்
சோப்பை"
உபயோகியுங்கள்

**ராயல் சோப் பாக்டரி,**

கோட்டாறு, தென் திருவிதாங்கூர்

பிராஞ்சு

மேல ரத வீதி,

**திருநெல்வேலி டௌண்.**

---

**'லயன் பிராண்ட்' காப்பி & தேயிலையை**

எல்லோரும் வாங்கி உபயோகியுங்கள்.




Trade Mark

**A. K. பெருமாள்**

Collecting Agent for
Indian Coffee Board
Government of India.
and
Wholesale license No. 118

**H. O. KOTTAR.**

BRANCHES:

*NAGERCOIL,*
*TRIVANDRUM,*
*(THE ESTATE AGENCY)*
*&*
*KOTTAYAM.*

கவிக்குயில் நிலைய[illegible]

மதுரை காமராசர் பல்கலைக்கழக
அவ்வை
தி.சு. சண்முகம் நூலகம்.

# முத்துக் குவியல்

பதிப்பாசிரியர்:

தே. ப. பெருமாள்.

கவிக்குயில் நிலையம்

கோட்டாறு :: தென்திருவிதாங்கூர்

இந்நூல்

**கவிமணி திரு சி. தேசிகவிநாயகம் பிள்ளை**

அவர்கள் 69-வது பிறந்ததின (29-7-1944) விழாவின்

போது அதன் நினைவில் வெளியிடப்பட்டது.

# வாழ்த்துகள்

*மதுரை*

திரு S. சோமசுந்தர பாரதியாரவர்கள்

மூவாஇள வளக்குமரிப் பழந்தமிழ் மொழிப்பாச்சுவை
ஓவாதுல கினுக்கூட்டக் கோட்டாற் றூரினிலே
ஏவாதினி யதமிழ்ப்பணி யாற்ற எழுந்தபுகழ்
நீவாக்கவிக் குயில்நிலைய மன்நீடுழி வாழியவே!

வாழ்க செந்தமிழ்! வாழியர் பாவலர்!
ஆழ்க நந்தமி ழன்னை பகைக்குலம்!
வீழ்க பொய்ம்மை! மெய்விறு பெற்றோங்குக!
சூழ்க வையத் தறம்பிற தோற்கவே.

S. S. பாரதியார்.

பசுமலை
**29-5-1944**

# பதிப்புரை.

முத்துக்குவியல் என்னும் இப்புத்தகம் கவிக்குயில் நிலையத்தின் மூன்றாம் வெளியீடாகும். இது தமிழுக்கு முற்றும் புதிய புத்தகம். இதற்குமுன் பழைய கவிஞர்களின் கவிதைத் தொகுதியாக நூற்கள் வெளிவந்திருக்கின்றனவேயன்றி நிகழ் காலக் கவிஞர்களின் கவிதைத் திரட்டாக நூற்கள் வெளிவந்த தில்லை. ஆகவே இதை ஒரு புது முயற்சி என்றும் எண்ணு கின்றோம்.

தமிழ் மறுமலர்ச்சிக் கவிஞர்கள் பலர் தமது சுடர் வீசும் முத்துக்கவிதைகளால் இந்நூலை அழகு படுத்தியுள்ளார்கள். அவர் கட்கு எங்கள் இதய நன்றி. நாமக்கல் கவிஞரவர்களின் கவி தையை எங்கட்கு கிடைக்கச்செய்த தமிழ்ப்பண்ணை நிர்வாக ஆசிரியர் **திரு. நா. அண்ணாமலை** அவர்கட்கும், திரு. K. N சிவ ராஜபிள்ளையவர்களின் கவிதையை இத்தொகுதியில் வெளியிட அனுமதி வாங்கித்தந்த வழக்கறிஞர் **திரு. B. சிவகுருநாதன் செட்டியார்** B. A B. L. அவர்கட்கும் நாங்கள் பெரிதும் கட மைப் பட்டிருக்கிறோம். இந்நூல் இவ்வளவு அழகாக வெளி வரத் துணைசெய்த மற்றைப் பெரியார்கட்கும் எங்கள் அன்பைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இந்நூலை கவிமணி **திரு சி. தேசிகவிநாயகம்பிள்ளை யவர்களின் 69-வது ஆண்டு பிறந்ததின விழாவின்போது** அவர்கள் நினைவிலேயே வெளியிடுகின்றோம். தமிழன்னைக்கு இடையறாது தொண்டுசெய்யும் அப்பெரியார் நீடூழிகாலம் வாழ்க!

இந்நூலைத் தமிழ்ப் பெருமக்கள் கலைச்சுவையுடன் வர வேற்பார்கள் என்று எண்ணுகின்றோம். தமிழன்னையின் பாதங்களை இந்நூல் ஒளிபெறச்செய்யும் என்பதுவும் எங்கள் இதயபூர்வமான நம்பிக்கையாகும்.

**கவிக்குயில் நிலையத்தார்.**

# முன்னுரை.

கலைகளில் எல்லாம் சிறந்தது கவிதைக்கலை. இன்று மற்றக் கலைகளில் மலர்ச்சி ஏற்பட்டிருப்பதுபோல கவிதைக்கலையிலும் புரட்சிகரமான மலர்ச்சி தோன்றியிருக்கிறது. இன்றையத் தமிழர்கள் தமது உணர்ச்சியூற்றைக் கவிதைச் சித்திரமாகத் தீட்டிக்காட்டுவதில் அதிக ஆர்வம் காட்டுகின்றனர்கள். அந்த ஆர்வத்தின் ஒரு சிறுசாயலே முத்துக்குவியல் என்றால் அது மிகையாகாது.

கவிதை இயற்கையில் வரவேண்டும்; எளிமையாக இருக்கவேண்டும்; அதிலும் இனிமையாக இருக்கவேண்டும்; கருத்தும், கற்பனையும், உணர்ச்சியும் அதன் ஜீவநாடியாக அமையவேண்டும். இத்தகைய கவிதைகளே இன்று தமிழருக்குத் தேவை.

உண்மைக்கவிதை இதயத்தின் அடிநிலத்தில் உணர்ச்சி என்னும் விதையினின்றும் உருவெடுக்கிறது. உணர்ச்சியில்லாத காலத்தில் கவிதை வெளித்தோன்றுமாயின் அதில் ஜீவநாடி துடிப்பதில்லை. அது வெறுஞ் சொற்பின்னலாகவே இருக்கும். மதில் கட்டிய கிணறு எவ்வளவு பெரியதாக இருப்பினும் அதன் நீர் உப்புச் சுவையை நல்குமாயின் அதைக்குடிநீராக யாராவது விரும்புவார்களா? சிறு சுனை சுவைநீரைத் தருமாயின் அதுவன்றோ யாவரும் விரும்புவதற்குரியதாக இருக்கும்! பாழடைந்திருக்கும் ஒளியில்லாப் பெரிய கட்டிடத்தைவிட ஒளி நிறைந்து அழகுடன் தூய்மையாக இருக்கும்

சிறுகுடிசையே சிறப்பு கொண்டது. இவற்றைப்போன்ற தே உண்மைக் கவிதைக்கும் போலிக்கவிதைக்கும் உள்ள வேறுபாடு. ரசகுண்டு கீழ்வீழின் உடைந்து சூனியமா வதுபோல போலிக்கவிதையும் வாழ்க்கை உரைகல்லில் வீழும்போது சிதறிப்போய் பயனற்றதாய் விடுகின்றது.

வாழ்க்கையை முன்னேற்றப் பாதையில் இழுத்துச் செல்லும் சக்திகொண்ட பல கவிதைகள் முத்துக்குவிய லில் இடம்பெற்றுள்ளன. ஒவ்வொன்றும் ஒவ்வொரு வித உணர்ச்சியை நல்குகின்றது. சிலகாதல் சித்திரங்க ளாகக் காட்சி தருகின்றன. பல சித்தாந்தக் கோபுரங்க ளாக விளங்குகின்றன. இன்னும் பல சோகக் குன்றுக ளாகத் தோற்றம் நல்குகின்றன. வேறு சில வேதாந்த ஆறுகளாக ஓடுகின்றன. இன்னும் பல, விதவித உணர்ச்சிப் பொறிகளால் உருப்பெற்று உயரிய லட்சியத் தைக் காட்டுகின்றன.

தமிழ்ப்பெருமக்கள் நல்ல ஆர்வமுடன் இந்நூலை வர வேற்பார்கள் என்று எண்ணுகின்றேன். இது கவிதை வளர்ச்சிக்காகப் பாடுபட்டுவரும் கவிக்குயில் நிலையத் தாருக்கு ஒரு நல்ல ஆதரவாக இருக்குமென்பதும் வெளிப்படையாகும்.

**தே. ப. பெருமாள்**

*பதிப்பாசிரியர்.*

# பொருளடக்கம்


| எண் | | எழுத்தாளர் | பக்கம் |
|---|---|---|---|
| 1. | வணக்கம் | 'களஞ்சியம்' | 9 |
| 2. | பெண்மாட்சி | கா.ப.செய்குதம்பிபாவலர் | 10 |
| 3. | நீதிவெண்பா | ,, | 13 |
| 4. | இதயத்தேன் | சி.தேசிகவிநாயகம்பிள்ளை | 15 |
| 5. | சேர்கக்கவிதை | ,, | 20 |
| 6. | அன்பின்தோற்றம் | ,, | 20 |
| 7. | தேவிபிரார்த்தனை | 'முத்து' | 21 |
| 8. | விரும்பும் வாழ்க்கை | சுத்தானந்த பாரதியார் | 24 |
| 9. | வாழ்த்துப் பூந்துணர் | தி. இலக்குமண பிள்ளை | 26 |
| 10. | நாஞ்சில் நாடு | வே. சுடலைமுத்து பிள்ளை | 28 |
| 11. | பணமும் உழைப்பும் | 'கவிதைப் பித்தன்' | 31 |
| 12. | தேறிய தெளிவு | வெ. இராமலிங்கம் பிள்ளை | 35 |
| 13. | காவிரி | பெ. தூரன் | 38 |
| 14. | பேராசைக்காரி | கம்பதசான் | 41 |
| 15. | புன்சிரிப்பு | ந. பிச்சமூர்த்தி | 43 |
| 16. | நனவாகவேண்டியகனவு | கு. இராமலிங்கன் | 45 |
| 17. | பூவையர்க்கிரங்கும் புள்ளினம் | P. S. சிவம் | 47 |
| 18. | சிறைமீட்போம் வாரீர்! | ப. சுந்தரவேலன் | 50 |
| 19. | காலைப்பாட்டு | க. சிதம்பரதாணு | 52 |
| 20. | குமரிமுனை | சு. உமைதாணு பிள்ளை | 54 |
| 21. | கவிதைமலர் | 'தில்லைக்கூத்தன்' | 56 |
| 22. | புயலும் பட்டும் | 'கலைவாணன்' | 58 |
| 23. | நிலக்கரியும் வைரமும் | 'உல்லாசன்' | 62 |
| 24. | உதயம் | 'நாஞ்சில்' | 66 |
| 25. | காமம் | 'வேலன்' | 68 |
| 26. | ஒற்றுமையின்வெற்றி | S. சிவராமன் | 70 |
| 27. | கண்ணியல் | A. நாராயண பிள்ளை | 71 |
| 28. | அருவியன் காதை | K, N, சிவராஜ பள்ளை | 74 |
| 29. | பேனு | 'செந்தாமரை' | 77 |
| 30. | காலம்காட்டும்வழி | சி. எஸ். சுப்பிரமணியன் | 81 |
| 31. | தாண்டவக்காட்சி | S. ஆதிமூலப்பெருமாள் | 83 |
| 32. | அன்னை | தே. ப. பெருமாள் | 86 |
| 33. | இன்றையநிலை | ,, | 88 |

அவ்வை
தி.க. சண்முகம் நூலகம்.

# முத்துக் குவியல்.

## 1 வணக்கம்

(களஞ்சியம்)

*நாமகள்*

உருமகளை அயனுவி லுறைமகளைப்
பொருறைமகளை யுலகுக் கெல்லாங்
குருமகளை யன்பர்புகழ் குலமகளை
மலர்மகளைக் குறைதீர் செல்வத்
திருமகளின் மருமகளை நிலமகட்குங்
கலைமகளைச் செவ்வி வாய்ந்த
ஒருமகளை எனக்கருள வருமகளைப்
பெருமகளை யுன்னல் செய்வாம்.

*திருமால்*

கன்றெடுத்துக் கனியுகுத்துக் கருதுமுல
கோரடியில் கவினச் சேர்த்துக்
குன்றெடுத்துப் பசுநிரைகாத் தாயர்குலக்
கோபியர்கள் கொண்ட கூறைச்
சென்றெடுத்துத் தூதுரைத்து வெண்ணெயொடு
தயிர்நெய்பால் சேர வொன்றாய்
அன்றெடுத்துத் தின்றதகை யாதவனை
மாதவனென் றகத்துள் வைப்பாம்.

# 2 பெண் மாட்சி

*மதுரைத் தமிழ்ச் சங்கப் புலவர்*
*மஹாமதி, சதாவதானம்*
*தேவாமிர்தப் பிரசங்கக் களஞ்சியம்,*

**(கா. ப. செய்குதம்பிப் பாவலர்)**

*நாஞ்சில்நாடு நாளுக்குநாள் கனத்து வருகிறதென்று ஒரு சமயம் நண்பரொருவர் சொன்னார். காரணம் அவரிடம் வினவியதில் தமிழ்ப் பெருக்கம் என்று பதிலும் தந்தார். நண்பரின் இம்மொழிகள் முற்றும் உண்மையே. இன்று நாஞ்சில்நாட்டிலே தமிழார்வம் தலைசிறந்து விளங்குகின்றது. ஒவ்வொரு இளைஞரும் தாய்மொழி நலனுக்காக இடையறாது உழைத்து வருகின்றனர். இதற்குக் காரணமாயிருந்த ஒரு சிலருள் ஒருவர்தான் திரு. கா. ப. செய்குதம்பிப் பாவலர் அவர்கள். இவர்கள் தமிழ்ப்பணியால் நாஞ்சில்நாட்டிலுள்ள அநேகர் இன்று வித்வான்களாகத் திகழ்கின்றார்கள். ஒரு நாளில் நூற்றுக் கணக்கான கவிதைகள் பாடும் பழம் புலவர் தலைமுறையைக் காத்துவரும் பெரும் புலவர் இவர். இவரது கவிதைகள் இன்ப சாகரம்; உணர்ச்சியூற்று; கவின் பொழியும் கற்பகம். இவரது கவியமுதத்தைத் தமிழர்கள் முன்னிலையில் வைக்கின்றோம்.*

பெண்ணே பெண்ணே பெண்மணியே
பெருமை நிறைந்த பெட்டகமே
பண்ணே நிகர்த்த மொழிமறவாப்
பைம்பொற் கிளியே பசுந்தேனே!

பூமா தேவி நீயானாய்
புகழின் செல்வி நீயானாய்
நாமா மகளும் நீயானாய்
நளினத் தலைவி நீயன்றோ?

நாவி லொருவன் இடத்தொருவன்
நறைசேர் மார்பி னடுவொருவன்
ஆவி யனைய வைத்ததுன்னை
அல்லால் யாரே அறையாயே?

சிருட்டிக் கரசா யெழுந்தனையே
ஜெகத்தின் வடிவாய்த் திகழ்ந்தனையே
இருட்டி மறைந்த வுலகினுக்கே
ஏற்றி வைத்த விளக்கானாய்!

கொள்ளுங் கணவர்க் குயிரானாய்
கூறு மமைச்சுந் தானானாய்
அள்ளும் பிணிக்கோ ரமுதானாய்
அறத்திற் குகந்த துணையானாய்!

நல்லா ரெவர்க்கும் தொழும்பானாய்
நவைதீர் விருந்தி னட்பானாய்
இல்லார்க் கிரங்கும் பொழிலானாய்
இயல்நாற் குணத்திற் கிருப்பானாய்!

சிற்றிற் சிதைக்கு மகவானாய்
சிறுவர்க் கூட்டுந் தாயானாய்
பற்றிற் காக்கும் பாட்டியெனப்
பரிவோ டுறவும் தாங்கினையே!

கற்பிற் கிலக்காய் நின்றனையே
காய்தீக் குளித்துக் களித்தனையே
அற்பிற் கணவ னுயிர்கவர்ந்த
அந்த கன்கை மீட்டனையே!

உறுவ தோரா தொருமூவர்
உரைத்த மொழிக்கே உட்டுணுக்கிச்
சிறுவ ராக்கித் தொட்டிலிட்டுச்
சிறப்போ டாட்டி மகிழ்ந்தனையே!

உரிய உரிய அரையினிடை
ஓங்கி வளருந் துகில்காட்டி
அரிய மகிமை விளைத்தனையே!
அழியாப் புகழும் பெற்றனையே!

எல்லாம் நீயே இல்லையெனில்
எல்லா மில்லை யென்றுரைக்கும்
வல்லார் வாய்மைக் கொருசான்றாய்
வந்தா யிருந்தாய் வாழ்ந்தாயே!

வாய்ந்த வுன்றன் மாட்சியெலாம்
வவ்வி பறித்த மாக்களினி
ஆய்ந்து தெளியுங் காலமிதோ?
அடுத்த தடுத்த தறிவாயே!

# 3 நீதி வெண்பா

*[இதுவும் திரு. பாவலரவர்கள் கவிதையே. இதில் கல்விச் சிறப்பும், பெரியார் பண்பும், சிறியார் சிறுமையும் நன்றாக விளங்கக் காணலாம்]*

அருளைப் பெருக்கி யறிவைத் திருத்தி
மருளை யகற்றி மதிக்குந் - தெருளை
அருத்துவது மாவிக் கருந்துணையா வின்பம்
பொருத்துவதுங் கல்வியென்றே போற்று.

வாய்த்த கலையுணர்ச்சி மாண்ட மனத்துரவோர்
சாய்த்த தலைதூக்கித் தருக்கார்காண் - காய்த்தகிளை
பாரம் பொறுமல் படிந்துதலை தாழ்த்தலல்லால்
நேர நிமிருமோ நின்று.

நிந்தனையும் வந்தனையும் நேர்ந்தொன்றாய்க் காண்பதல்லால்
சிந்தை திரிவாரோ சீரியோர் - அந்திமுல்லை
என்சொலினும் தன்மணத்தை யிந்தருள்வ தன்றிமற்றோர்
புன்மணத்தை நல்குமோ பூத்து.

பாலுற்ற நீருமப் பாலாம் பருக்கிலப்பால்
மேலுற்றுத் தீக்குளித்து வெந்திடுங்காண் - ஏலுற்ற
தக்கார்மற் றோர்நட்டால் தாமாவர் தாம்பிரிந்தால்
ஒக்கா ருயிர்வாழற் குற்று.

கூடாரைக் கூடற்க கூடிற் குறித்தவெலாம்
நாடா தெறிந்தேனும் நட்பொழிக - ஆடுமயில்
பச்சோந்தி பாற்படா பட்டார் பனிமலர்க்கண்
அச்சோ வழித்தொழியு மால்.

பூவாது காய்ப்பதுவே பூம்பனசம் போலுமொன்றை
ஏவாது செய்வதுவே எச்சமென்க - ஓவாமல்
ஏவியுஞ் செய்யா இழிமகவுக் கென்னுவமை
நாவியு மாமோ நவில்.

தோய்ந்த கரவொழுக்கைச் சூழ்ந்துமறைத் தாலுமின்னார்
ஏய்ந்தகருக் காட்ட லியல்பன்றோ - மாய்ந்தமச்சம்
பட்டாற் பொதியகினும் பாய்ந்தெழுபுன் னாற்றமண்ட
மட்டாய் மிகுமே மலிந்து.

# 4 இதயத் தேன்

## (கவிமணி, சி. தேசிகவிநாயகம் பிள்ளை)

கவிஞர் சுப்பிரமணிய பாரதியாரை அவரது வாழ் நாளிலே போற்றுகின்ற பெருமை தமிழ் மக்களுக்குக் கிடைக்க வில்லை. ஆனால் கவிமணி திரு தேசிகவிநாயகம் பிள்ளையவர் களைப் போற்றுகின்ற பேறு தமிழ் மக்களுக்குக் கிடைத்தது பெரிய கௌரவம் என்றே சொல்லவேண்டும். கவிமணியவர் களின் சேவை தமிழ் மறுமலர்ச்சிப் பண்ணையில் ஒப்பற்ற தாகும். தமிழகத்தில் அவர்கள் கவிதைகளை ஆயிரக் கணக்கான மக்கள் பாடிப்பாடி அனுபவித்து ஆனந்தம் அடைகின்றார்கள். பள்ளிச் சிறுவர் சிறுமியர்கள் அவர்தம் பாடல்களைப் பாடி தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செய்கிறார்கள். கன்னியர்கள் ஊஞ்சலாடும்போது இவர்கள் பாடலை தமது துயில் தூரலால் பாடி ஆனந்தம் எய்துகின்றார்கள். அன்னைமார் தமது இதய அன்புக் குழந்தைகளைத் துயில்விக்கும்போது இவர்கள் தமிழமுதப் பாட்டால் தாலாட்டுகின்றார்கள்!

கவிமணியின் கவிதைகள், மழைக்காலம் மாசு மறுவற்று வீசும் சந்திரனின் நிலவைப்போன்று குளிர்ச்சியூட் டுபவை. வாசம் வீசும் ரோஜாமலரின் இதழ்போன்ற மென்மைத் தன்மை கொண்டவை. புயல்பொழியும் மழைபோல் கருணைப் பெருக்கை உள்ளத்தில் நிரப்புபவை. இனிய சுனையின் சுவை நீர்போல் இன்பம் நல்குபவை. அம்புபோல் உள்ளத்தில் பாயும் இயல்பு கொண்டவை.

இவர்கள் கவிதையிலே பக்தியின் விசாலத்தைக் காண்கின்றோம். காதலின் தூய்மையை உணர்கின்றோம். சோகத் தின் ஆழத்தை அறிகின்றோம். சமூகத்தின் ஊழலையும், ஏழ்மை யின் பிரதிபலிப்பையும் கண்டு சீர்திருத்தப் பாதையை நோக்கித் தாவுகின்றோம். நாட்டின் இழிநிலை கண்டு இதயத் துடிப்பு

கொண்டு கர்மப் பாதையை நோக்கி விரைகின்றோம். இன்னும் எத்தனையோ மின்னல் உணர்ச்சிகள் இவர்கள் கவிதையிலே நமக்கு ஏற்படுகின்றன.

கீழ்வரும் கவிதைத்தேன் பாரசீக மகாகவி உமர்க் கய்யாம் என்னும் புலவரின் உள்ள மலரில் பொங்கி வழிந்த தாகும். இதை நமது கவிமணியவர்கள் தமிழாக்கி அப்படியே சுவைகுன்றாது நல்குகின்றார்கள். இதை அள்ளிப் பருகி வாழ்வில் ஆனந்தவெறி கொள்வோமாக!

மலையில் ஏறி நிற்கின்றோம்
மறிந்து கடலில் வீழ்கின்றோம்
சுலவு புயலில் அகப்பட்டுச்
சுழன்று சுழன்று செல்கின்றோம்
அலையில் பொங்கும் நுரையல்லால்
அடைந்த பயன்வே றொன்றுமில்லை
உலகின் உண்மை இதுவென்ன
உரைக்க வல்லார் எவரம்மா?

ஏழை ஒன்றை எண்ணுகின்றேன்
ஈசன் ஒன்றை எண்ணுகின்றான்
ஏழை எண்ணம் இந்நிலையில்
என்றும் நிறைவு கண்டிடுமோ?
ஏழை என்றன் நன்மையலால்
ஈசன் வேறொன் றெண்ணுவனோ?
ஏழை எண்ணம் நிறைவேறு
திருத்த லன்றோ நலமப்பா!

அன்பு செய்யின் அயலாரும்
அண்டி நெருங்கும் உறவினராம்
அன்பு நீங்கின் உறவினரும்
அகன்று நிற்கும் அயலாராம்
துன்ப நோயை நீக்கிடுமேல்
துவ்வா நஞ்சும் அமுதாகும்
துன்ப நோயை ஆக்கிடுமேல்
தூய அமுதும் நஞ்சாமே!

ஈச னடியார் எவ்வெவரும்
ஈச னடியில் வாழ்பவராம்
ஈசன் அடியார் உள்ளத்தில்
என்றும் கோயில் கொள்கின்றான்
ஈச னடியார் யாவர்க்கும்
இதய மொன்று மாதலினால்
ஈச னடியார் பேசுண்மை
என்றும் என்றும் ஒன்றேயாம்!

என்றும் என்றும் என்குறைகள்
இரவும் பகலும் ஆராய்வேன்
அன்றி அயலார் குறைகாணில்
அடைத்துக் கண்ணை மூடிடுவேன்
இன்றிவ் வுலகின் கொடுமையெலாம்
இதயம் பிளவு செய்திடுமால்
ஒன்றி யிங்கு வாழ்வதிலும்
ஓடி ஒழிதல் நலமாமே!

வாடி நித்தம் வருந்திடினும்
வயிற்றுக் குணவு தரமாட்டாய்
தேடி வைத்த பொருளையெலாம்
திருடிக் கொண்டு போயிடுவாய்!
ஆடிச் சுழலும் ராட்டினமும்
ஆடைக் குதவும் நூல்தருமே
நீடு காலச் சக்கரமே!
நின்னால் ஏதும் பயனுண்டோ?

உன்னை எண்ணில் என்னுள்ளம்
ஊக்கம் அடையும் ஐயமில்லை
உன்னை யல்லால் ஒருவரையிவ்
வுலகில் நோக்கு மாசையிலேன்
உன்னை நோக்கி என்முகமங்
கொளிரக் கண்டு மகிழ்ந்திடுவேன்
என்னை நோக்கி என்னுள்நீ
இருத்தல் கண்டு வாழ்த்திடுவேன்.

மலர்ந்து நல்ல மணம்வீசி
வையம் மகிழ வாழாமல்
உலர்ந்து வீழும் அரும்புகளிவ்
வுலகில் யாரே கணக்கிடுவார்?
கலந்த திருவும் யௌவனமும்
கண்ணுக் கினிய மெய்யழகும்
குலைந்து போகு மென்றறிஞர்
கூறும் மொழியும் பொய்ம்மொழியோ?

எண்ணில் சமய வாதியர்கள்
இருளில் அலைந்து திரிகின்றார்
கண்ணில் காண்ப தொன்றுமில்லை
கையில் தீபம் ஏதுமில்லை
விண்ணு மதிர முழங்கிடுவர்
வீணாய்ச் சண்டை மூட்டிடுவர்
மண்ணில் மனிதர் ஒன்றாகி
வாழும் வாழ்வைக் கெடுத்திடுவர்

எண்ணி எண்ணி என்குறைகள்
ஏனோ நிதமும் கூறிடுவர்
பண்ணும் செயல்கள் பழித்திடுவர்
பாவி யென்றும் தூற்றிடுவர்
மண்ணில் யானோர் ஒளிவட்டம்
மற்றவ் வட்டம் நோக்கிடுவோர்
கண்ணில் காண்ப தவரவர்தம்
காட்சி யல்லால் வேறாமோ?

# 5 சோகக் கவிதை

'அன்னை கஸ்தூரிபாயின் ஆவி பிரிந்தது' என்ற செய்தியைக் கேட்டதும் கவிமணியின் உள்ளம் தகர்ந்தது. சோக வெள்ளக் காட்டிலே அவர்கள் முங்கித் தவித்தார்கள். அவ்வமயம் அவர்கள் இதயப் பூங்காவினின்றும் உதிர்த்த மலரே கீழ்வரும் சோகக் கவிதை.

வையம் புகழும் காந்திமகான்
வாழ்க்கைத் துணையாய் வாழ்ந்துநிதம்
செய்யும் தொழில்கள் ஒவ்வொன்றும்
திருந்தச் செய்து கண்கண்ட
தெய்வம் கணவன் என்றுள்ளம்
தெளிந்த தாயே! நீயெம்மை
வெய்ய துயரில் வீழ்த்தியின்று
விண்ணு டாளச் சென்றனையே!

---

# 6 அன்பின் தோற்றம்

நேமத்தான்பட்டி திரு. பழநியப்பச்செட்டியார் அவர்கள் அன்பின் சக்தி இக்கவிதையில் விளங்குகிறது. அது அளிக்கும் தோற்றத்தை கவிமணியவர்கள் சித்தரிக்கும் விதமே ஒரு தனிப் பண்பு கொண்டதாயுமிருக்கிறது.

கோயிலா யோங்கும் குளமாய்ப் பெருகிநிற்கும்
நேயமிகு கல்வி நிலையமுமாம் - ஆயபல
புண்ணியங்கள் செய்து புவியில் புகழ்வளர்க்கும்
அண்ணல் பழநியப்பன் அன்பு.

# 7 தேவி பிரார்த்தனை

(முத்து)

தமிழிலக்கியக் கடலில் சுடர்வீசும் முத்து என்னும் இக் கவிஞர் இராமகிருஷ்ண பரமஹம்ஸரின் தேவி பிரார்த்தனையைத் தழுவி கீழ்வரும் கவிதைகளை எழுதியிருக்கிறார். கவிதையில் பக்தனின் ஆர்வத்தையும், மனக்குழைவையும் நன்றாகக் காணலாம்.

உன்னரு ளல்லால் - வேறிங்
கொருதுணை யுண்டோ?
என்னை அண்டிடநீ - உள்ளம்
இரங்க வேண்டுமம்மா!

மாசி லாதஅன்பு - நெஞ்சில்
வளர வேண்டுமம்மா
ஆசை வேரெல்லாம் - அடியோ
டழிய வேண்டுமம்மா

உலக மாயையிலே - சிக்கி
உழன்று நையாமல்
அலகி லாதவுன்றன் - அருளால்
ஆள வேண்டுமம்மா

பொருளும் வேண்டாமம்மா - எனக்குப்
புகழும் வேண்டாமம்மா
அருளே வேண்டுமம்மா - வேறோர்
ஆசை இல்லையம்மா

காமராசர் பல்கலைக்கழக ... அவ்வை ... சண்முகம் நூலகம்

கோயில் என்னெஞ்சாய் - என்றும்
குடியிருப் பாயம்மா
தாயின் அருளல்லால் - எனக்கோர்
தஞ்சம் வேறுண்டோ?

சித்திகள் பெற்றரிய - செயல்கள்
செய்ய வேண்டாமம்மா
பத்தியோ டுன்பாதம் — நிதமும்
பணிதல் போதுமம்மா!

மாசிலாத அன்பை - உன்னை
மறக்கவொண்ணுத அன்பை
தாசனுகும் அன்பை - எனக்குத்
தந்தருள்வா யம்மா!

காமம் அண்டாமல் - என்னைக்
காக்க வேண்டுமம்மா
தீமை சாராமல் - உள்ளம்
தெளிய வேண்டுமம்மா

ஆன துணையிங்கே - பிள்ளைக்
காரு மில்லையென
நானு ரையாமல் - நீயே
நன்க றிவாயம்மா

ஐம்புலச் சேட்டை - முற்றும்
அடங்க வேண்டுமம்மா
நம்பியுன் பதமே — உள்ளம்
நாட வேண்டுமம்மா.

ஏடு கண்டறியேன் - ஏட்டில்
எழுத்தும் கற்றறியேன்
பாடிப் பாடியுனை — போற்றிப்
பணிவ தெப்படியோ?

உண்மை அன்பில்லை — ஞான
ஒளியும் நெஞ்சிலில்லை
அண்மை யாகவந்துன் - பாதம்
அடைவ தெப்படியோ?

மண்ணில் உன்பிள்ளை - தனியே
வாடி நிற்பதைநீ
கண்ணி லெந்நாளும் - தாயே
கண்டறி யாயோ?

மருளும் இவ்வுலகில் - ஏழை
வருந்தி வாடாமல்
அருட்பெருங் கடலே - உண்மை
அன்பளிப் பாயம்மா!

# 8 விரும்பும் வாழ்க்கை

## (யோகி ஸ்ரீ சுத்தானந்தபாரதியார்)

'புவிச்செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்' என்ற மொழியை தமிழன்னையின் ஆணையாக கவிஞர் சுப்பிரமணிய பாரதியார் தமிழருக்கு உபதேசித்தார். புதுவைக் கவிதைப் பூங் காட்டில் அரவிந்தஞான நிலையத்தில் வீற்றிருக்கும் சுவாமி சுத்தா னந்த பாரதியாரவர்கள் இதை தமது சலியாத தமிழ்ப் பணியால் நன்ருக நிறைவேற்றி வருகின்ருர்கள். பிறமொழிகளிலிருந்து கவிதை, கதை, கட்டுரை, நவீனம், நாடகம் முதலியவைகளை தமி ழாக்கியுள்ளார்கள். இவர்கள் கவிதை நாம்பிலும், உள்ளத்திலும் உயிரிலும் உணர்வுத் துடிப்பேற்றும் தன்மை வாய்ந்தவை. கலையன் னைக்கு இவர்கள் ஆக்கிக்கொடுத்த காவிய அணிகள் என்றும் அழியாத அமரத்வம் வாய்ந்தவை. இவர்கள் கவிதையிலே ஆழ்ந்த கருத்துக்கள், உயர்ந்த தத்துவங்கள், சிறந்த சித்தாந்தங்கள் முதலி யவை பிரதிபலிக்கக் காணலாம். 'விரும்பும் வாழ்க்கை' என்னும் இக்கவிதையிலே தீமையில்லாத - சுதந்திரமான - ஆனல் நிலையான வாழ்வை இவர்கள் இறைவனிடம் விரும்புகின்ருர்கள்.

என்னென்ன வந்தாலும் - உலகில்
இனபங் குறையாமல்
உன்னத வாழ்க்கையருள் - இறைவா
உள்ளப் பரம்பொருளே

ஆறு கலந்தாலும் - உடனே
ஆவியாய்ப் போனலும்
மாறுப டாக்கடல்போல் - என்
மனமிருக்க வருள்

பாரெங்கு மேநிறைந்தும் - எங்கும்
பற்றற்ற காற்றினைப்போல்
போராடும் பூமியிலே - சுதந்தரம்
பொலிந்து வாழவருள்

மாசற்ற சேயினையும் - தாய்
மஞ்சன மாட்டிமிகத்
தேசுறச் செய்வதுபோல் - மனத்
தீமை துடைத்தருள்வாய்!

மீனிர வற்றாலும் - கார்மழை
மேகங் கவர்ந்தாலும்
பால்நில வற்றாலும் - பகலொளி
பாய்ந்து பரந்தாலும்

வான விரிவினைப்போல் - நிலைக்கும்
வாழ்வை எனக்கருள்வாய்!
போன வெளியினிலே - விளங்கும்
முத்தி மணிவிளக்கே!

# 9 வாழ்த்துப் பூந்துணர்

## (இசைச்செல்வர் தி. இலக்குமணபிள்ளை)

*வானத்தில் மின்னல் மின்னிப் பாய்வதுபோல் இசை உள்ளத்தினின்றும் உருகிப் பாயவேண்டும். கான வெள்ளத்திலே இந்தப் பண்பைப் பெருக்கித் தருபவர்கள்தான் இசைச் செல்வர் திரு. இலக்குமண பிள்ளையவர்கள். இவர்களின் மதுர கீதங்கள் கவலையற்ற இன்ப உலகத்துக்கு புலனை இழுத்துச் செல்லும் மோஹன விமானங்கள். 'தமிழிலே சாகித்தியம் இல்லை' எனச் சாக்குக்கூறி எதிர்ப்பு செய்யும் தமிழிசை எதிர்ப்பாளர்களின் வாயடைத்துப் போதும்வண்ணம் நூற்றுக்கணக்கான கீர்த்தனங்களை இவர்கள் இயற்றித் தந்துள்ளார்கள். அந்தத் தமிழிசைக்கு உயிர்கொடுத்து, அதைத் தழைக்கச் செய்துவரும் வள்ளல் ராஜா சர். அண்ணாமலைச் செட்டியாரவர்கள்மீது பிள்ளையவர்கள் பாடிய வாழ்த்துகளே கீழ்வரும் கவிதைகள்.*

**வானுடனைப் பொலிவெய்திய செல்வவணிகர் தங்கு**
**மேனுடெனும் செட்டிநாட்டின் தலைநகர், மென்மலர்கள்**
**தேனூடு வண்டிசைக்கும் பசுஞ்சோலைச் செறிவுடைய**
**கானூடு காத்தநல்லூர் பெற்றதேதமிழ்க் கானனையே.**

**அரும்பெறலே இந்தவள்ளல், நம்நாட்டில் அருந்தவரும்**
**பெருந்தமிழ் மக்களும்ஈட்டிய நற்றவப் பேறிவனே;**
**திருந்திய சீர்பெறநம் நாட்டினுக்கும் திருமொழிக்கும்**
**பொருந்திய காலமிதுவே யென்றுள்ளம் புளகிக்குதே.**

பல்கலை நந்தமிழ் மக்களிடையில் பரப்புதற்காய்ச்
செல்வக் கழகம்நிறுவி அண்ணாமலைச் செல்வன்நிற்க
கல்விக்குப் பஞ்சமென் நாம்அறியாமை என்காட்டிடத்தை
வெல்குவம், மேற்கொண்டு செல்குவம்,முன்னணி மேவுவமே!

அற்றார்க்கழி பசிதீர்த்தலும் ஏழை அயலவர்க்கும்
உற்றார்க்கும் வேண்டும் பொருளீதலும் இவ்வுலகினிலே
கற்றாரெழும்பக் கலைதேர்நிலையங்கள் கட்டல் முன்னே
எற்றாகும், கங்கைமுன் சிற்றாறுபோலும், இயம்பிடினே!

இமிழ்கடல்சூழ் நிலத்தே முதற்றோன்றி இலக்கியச்சீர்
கமழ்தமிழ்ச் செம்மொழி மேலோங்கக்கங்கணம் கட்டிநின்றான்;
அமிழ்தினுக் கீடென ஆன்றோர்கொண்டாடும் அருமையுற்ற
தமிழினுக்கிப்படி யாரிங்கு நாயகம் தாங்குவரே?

இசைப்பெரு வள்ளல் இசைக்கலையோங்க எழுந்துநின்றால்
வசப்படு வாரன்றி, மாறிட்டமாந்தர் வசங்கெடுவார்;
கசக்குமனத் தினராயெதிர்ப் பாரக்கன நிலையை
அசைக்கவல்லா ரல்லர், தெய்வத்தினாற்றல் அணைநிற்குமே!

ஆழ்ந்தகல்நோக் கரசண்ணா மலையின் அறந்தெளிக்கும்;
தாழ்ந்தவர்பால் அன்புகொண்டு, நம்செந்தமிழ் நாட்டுநலம்
சூழ்ந்து செயல்புரியும் வீரன்,நீடிய சோபையுடன்
வாழ்ந்துபல்லாண்டிலங்கத் தொழுவோம்,இந்த மண்டலத்தே!

# 10 நாஞ்சில்நாடு

## (வே. சுடலைமுத்துப் பிள்ளை)

இந்தியாவின் தென்கோடியிலிருப்பது நாஞ்சில்நாடு. இந்நாடு பாரத அன்னையின் பாதங்களில் முத்தையும், பவளத்தையும் காணிக்கையாகச் செலுத்தி இசைபாடும் குமரித் துறையைக் கடைசி எல்லையாகக் கொண்டிருக்கிறது. இங்கு எங்கு நோக்கினும் பசிய வயல்கள்; குளிர் பூஞ்சோலைகள்; கனி உதிரும் காவுகள்; தேனீர்ச் சுனைகள்; தாமரைத் தடாகங்கள்; கற்பனையைச் சிதறிக் கவின்பொழியும் நதியுடன் இன்னும் எத்தனையோ இன்பக் காட்சிகள்!

இந்நாடு சரித்திரச் சிறப்பு வாய்ந்தது. உலகப் பெருமக்களின் தரிசனத்தைப் பெற்று மகிழ்வது. கலைஞர்கள் கலையன்னைக்கு நலந்தீட்டிய இடமிது. அவளுக்குக் கவிஞர்கள் காவிய மாளிகை செய்துகொடுத்த பூமி. இன்றும் இங்கு எத்தனையோ மன்றங்கள் தாய்மொழி நலனுக்காக உழைத்து வருகின்றன.

கீழ்வரும் கவிதைகளில் திரு. வே. சுடலைமுத்துப் பிள்ளையவர்கள் இந்நாட்டு வனப்பைச் சொல்லோவியமாகத் தீட்டிக் காட்டுகின்றார்கள். கவிதைகள் சொல்லோசையும், பொருட்செறிவும் நிறைந்து விளங்குகின்றன.

பொன்மகளும் பூமகளும் புதுமைபெற நாளும்
பொருத்தமுற வாழ்கின்ற பொற்புடைய நாடு
தென்மலர்கள் தேன்பிலிற்றும் பன்மரத்தின் செறிவால்
திக்கனைத்தும் பூம்பந்தர் திகழ்தொளிரும் நாடு

வானுயர்ந்த மலைகளெலாம் வரிசைபெற நின்று
மாமதிலாய்க் காவல்செயும் வலியிருந்த நாடு
கானுயர்ந்த வரைமுகட்டில் கார்பொழிந்து சாடும்
கடவுள்நதி யானபழை யாறுடைய நாடு

நெல்விதைக்கப் பொன்விளையும் நீர்மையத னாலே
　　நிதங்கொழிக்கும் பெரும்போகம் நெடிதளிக்கும் நாடு
நல்வினைக்குப் பன்மடங்கு நண்ணிடுவ தான
　　நந்தாத நலங்களெல்லாம் சிந்தாத நாடு

நீர்பருகி நிதம்பொழியும் காருதவு பண்பை
　　நிதம்பருகி நீள்பழனம் பதம்பெருகி நிற்ப
ஏருழவர் செய்பயிரில் ஏந்தியநெற் குவியல்
　　இனங்காக்கும் பொன்மலையா யிலங்குகின்ற நாடு

கரும்பொடித்துக் கன்றேச்சிக் காவல்செயும் பணையில்
　　களைகட்குக் குரவையிடும் கருங்கணுழத் தியர்கள்
வரம்படித்த மணிபொறுக்கி மாற்றியபல் பொருளால்
　　வாழ்வுவக்கும் பெருமையினில் தாழ்வறியா நாடு

பருத்திவிளை பூமிகளிற் பரித்தபஞ்சை யெடுத்துப்
　　பசுமைபெற அரைத்ததனைப் பக்குவமாய் நூற்றுத்
திருத்தமுற நெசவுபெறும் விருத்தியினைக் கொண்டு
　　செய்தளிக்கும் ஆடைகளால் செல்வமுயர் நாடு

ஞாலம்வளர் கற்பகமே தாலமெனக் கூறும்
　　நற்றருவின் பற்பலவாம் அற்புதநற் பொருளால்
ஏலவெழும் ஆக்கமதை ஏந்தியொளிர் நாடு
　　ஏதமற்ற நீதமுயர் எழில்நாஞ்சி நாடே

கரைகாணுக் கடலில்மரக் கலங்கள்மிதந் தோடும்
காட்சிகண்டு சிறுவர்களித் தாடுகின்ற நாடு
திரைவாரித் தினங்கொழிக்கும் திரள்பவளம் முத்தால்
செய்கரையோ வெனத்தோன்றும் செவ்வியொளிர் நாடு

வயிரமணிக் குன்றுபல வளர்ந்தெழுந்த தெனவே
மாதர்மக்க ளோட்டளவர் வாரிநிதங் குவிக்கும்
செயிர்நீங்கும் உப்பளங்கள் சேகரமாய்த் தோன்றும்
சீருடைய நாடிதுபோல் செப்பிடவொன் றுண்டோ?

*வேறு*

மின்னுடும் மணிமாடம் மிகவோங்கும்
வீதிபல விளங்க லுற்ற
எந்நாடும் இயற்கைவள எழில்நலத்திற்
கீடின்மை யெண்ணி யெண்ணிப்
பின்னுடும் படியான பெருமையெலாம்
பெரிதேந்தி பிறங்கு கின்ற
நன்னுடும் தென்னுட்டில் நாவலர்கள்
புகழ்ந்துரைக்கும் நாஞ்சில் நாடே!

# 11 பணமும் உழைப்பும்

## (கவிதைப் பித்தன்)

ஒருநாள் சந்திரிகை இரவில், பணத்திற்கும் உழைப்பிற்கும் சம்பாஷணை நடக்கிறது. பணம் தனது ஆற்றல்களையெல்லாம் மிகவும் ஆடம்பரமாக உழைப்பிடம் சொல்கிறது. இதுகேட்ட உழைப்பு உலக இன்பத்திற்குத் தாமே மூலகாரணம் என்று மிகப் பணிவாகச் சொல்லியதுடன் பணத்தின் படைப்பும் தன்னாலேயே ஆகியிருக்கிறது என்றும் சொன்னது. இந்த ரசமான சம்பாஷணையை நம்மால் கேட்கவாமுடியும்? கவிதைப் பித்தன் கேட்டே நமக்குச் சொல்கிறார்.

சால அமைதி யிரவு - சப்தச்
சந்தடி யற்ற வேளை
நீல வானக் கடலும் - தாரகை
நித்தில மெங்கும் சிதறும்
கோலக் கொள்ளைப் பெருக்கில் - வானம்
கூட்டும் நுரையாய் மதியம்
சீல உருவில் தோன்றும் - தண்மை
சேர்க்கும் காதல் பெருக்கும்

அந்தி மலர்கள் விரிய - இன்ப
அழகுக் காவின் மத்தி
எந்த நாளோ வீழ்ந்த - நல்ல
எழிலைக் கொண்ட பணமும்
சொந்தக் குரலைப் பெற்றே - அங்கு
தூய்மை வடிவில் நின்ற
சந்த உழைப்பை நோக்கி – அதனில்
சாற்றும் இந்த மொழியே

என்னைப் போன்ற பெருமை - உலகில்
யாவர் பெற்றார் சொல்வாய்!
சின்னக் குழந்தை யேனும் - என்னைச்
சேர்த்து மகிழ எண்ணும்
மன்ன ரியாரும் என்னைத் — தங்கள்
மடியில் வைத்துக் காப்பார்
கன்னல் மொழியாள் குமரி - என்னில்
கண்ணை வீசி நிற்பாள்!

கிழவர் நிதமும் வந்தே - எனது
கேண்மை விரும்பி நிற்பார்
பழுத்த கலைஞர் யாரும் - என்றன்
பாதம் பற்றி வாழ்வார்
விழுப்பம் நிறைந்த நல்லோர் - என்னை
வேண்டி முகமன் சொல்வார்
அழுத்த மெல்லாம் என்றன் - சிறந்த
ஆண்மை கண்டே ஒழியும்!

ஒய்ந்து நைந்த ஏழை - என்றன்
உறவால் துள்ளிக் குதிப்பான்
நோயைப் பெற்ற மனிதன் - என்னை
நோக்கி எழுந்து வருவான்
தாயும் மகனில் பாசம் - எனது
தகைமை கண்டு வைப்பாள்
ஆயும் நீதி பதியும் - என்றன்
அன்புக் காக உழைப்பார்!

என்னே டிருந்து வாழ்வோர் - தினமும்
இன்ப அமுதே உண்பார்
குன்றை மிஞ்சும் மாடி - பல
கொண்ட இல்லில் வாழ்வார்
பொன்னும் மணியும் குவியும் - இன்பப்
போகச் செழிப்பில் மிதப்பார்
சின்னக் குணத்தா ரேனும் - நல்ல
சீரும் சிறப்பும் பெறுவார்!

உள்ளம் வெதும்ப உரைத்த - இந்த
உறுத்தும் மொழியைக் கேட்டே
மெள்ள உழைப்பும் சொல்லும் - "இந்த
மேதினி போற்றும் பணமே!
கள்ள ருன்னைக் கொள்வார் - முதிர்
கலைஞ ருன்னை யழைப்பார்
பிள்ளை புன்னை யணையும் - இன்னும்
பீடுகள் எய்துவை, ஆனல்

ஒண்சுடர் முத்து மணியால் - உயிரை
உதைக்கும் பசியும் போமோ?
எண்ணிடுந் தானியப் பெருக்கம் - நல்ல
இன்கனி வகைகள், சோலை
வண்ண மலர்கள் தெங்கின் - இன்ப
மதுர இளநீர்க் காய்கள்
பண்ணித் தருவதும் யாரோ - இந்தப்
பண்பை உணர்ந்தவ ருண்டோ?

சீலக் கோயில் கோபுரம் - உணர்ச்சிச்
சித்திர மண்டபம் சிற்பம்
நீலக் கடலில் செல்லும் - வாணிப
நிலையைப் பெருக்கும் கப்பல்
கோல எழிலை வீசி - வானில்
குதித்துத் தாவு விமானம்
சாலையில் செல்லும் எஞ்சின் - எனது
சக்தியில் வந்தவை யன்றோ?

ஆடையை வாங்குவை யேனும் - அந்த
ஆடையி னுக்கம் எதுவால்?
மாடிகள் வாங்க வைப்பாய் - எனினும்
மாடியும் தானே வருமோ?
நீடிய சாலை, குளங்கள் - வாழ்க்கை
நேர்மைக் குதவிடும் பொருட்கள்
கோடி களாகப் பணிகள் - நானும்
கொட்டும் உதிரத்தி லன்றோ?

உன்னைப் படைத்ததும் நானே - என்றன்
ஒப்பிலா சக்தி உணர்வாய்!
என்னை உலகம் இழக்கில் - இங்கே
இன்பமும் வாழ்வும் உண்டோ?
உன்னும் புதுமை களெல்லாம் - என்றன்
உயிரி லுதித்தவை யாகும்!
இன்னும் தருக்குதல் வேண்டாம் - உலகில்
இரக்கமும் சிறிது கொள்வாய்!"

# 12 தேறிய தெளிவு

## (தேசீயக்கவி வெ. இராமலிங்கம் பிள்ளை)

தேசீயக்கவி திரு. வெ. இராமலிங்கம் பிள்ளையவர்களை என்னும்போது சுதந்திரப் போர்முனையின் கீதம் நமது காதுகளில் ஒலிக்கின்றது. கவிஞரவர்களின் 'கத்தியின்றி ரத்தமின்றி யுத்தமொன்று வருகுது' என்ற கவிதை ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் உள்ளத்திலே ஆவேசக்கனலை எழுப்பிற்று. இன்பச் சுதந்திரத் தேட்டத்தை நல்கிற்று. அவர்களை கர்ம வீரர்களாகச் செய்தது.

கவிஞரவர்களின் கவிதைகள் வசந்தருதுவில் வீசும் வாசத்தென்றல் அல்ல. ஆனால் பருவ காலத்தில் பெய்யும் பயன்மிக்க காலமழையாகும். ஆடியும், சாடியும், ஓடியும், கூடியும், குதித்து விளையாடும் குழந்தைகள்போல் இவர்கள் கவிதைகளிலே வார்த்தைகள் கும்மாளம் கொட்டுகின்றன. இவைகள் வாழ்க்கைக் கோபுரத்தில் ஜீவ சக்தியேற்றும் மின்னல் பொறிகளாகவும், உணர்வுத் துடிப்பூட்டும் உயிர்ச் சுடராகவும் பரவுகின்றன. 'இற்றைத் தமிழன் இதயத் துடிப்பினை' இவை, எழிலொழுகக் காட்டும் இன்ப ஓவியங்கள்.

'நாட்டின் அறிவுக்கண் கவிஞன்' 'நாட்டின் கலைச் செல்வம் கவிஞன்' என்ற வாசகங்களின் பொருளைத் தெளிவுபடுத்தித் தமிழர் இதயக் கோவிலில் வாழ்வுகொண்டிருக்கும் கவிஞரவர்களின் 'தேறிய தெளிவு' என்னும் இக்கவிதை கவிதா ரசிகர்களுக்கு நல் விருந்தாய் அமையும் என நம்புகிறோம்.

துன்பம் எனும்பேயே! - நீ
தூரத் தொலைந்தொழிவாய்
இன்பத்தைக் கண்டுகொண்டேன் - உனக்கு
இங்கென்ன வேலையினி?

துக்கம் எனும் இருட்டே! - ஞான
சூரியன் தோன்றிவிட்டான்
பக்கம் வருவதற்கும் - இனி
பாத்தியம் ஏதுனக்கு?

காமக் கடுங்குறும்பே! - நெற்றிக்
கண்ணை அடைந்துவிட்டேன்
தாமதம் செய்வாயேல் - வெந்து
சாம்பல் கதியடைவாய்

சோம்பல் எனும்பிணியே! - உன்றன்
சொந்தத்தை விட்டுவிட்டேன்
தேம்பித் திரிபவரை - இனி
தேடிப் பிடித்துக்கொள்வாய்!

அச்சம் எனும்பகையே! - இனி
அண்டையில் நிற்பாயோ?
பச்சைக் குழந்தையைப்போல் - மனப்
பான்மை யடைந்துவிட்டேன்

கோபக் கொடுங்குணமே! - உன்றன்
கொட்டம் அடக்கிடுவேன்
தாபத்துக் கெட்டாதாம் - தெய்வ
சன்னதி என்னதுபார்!

ஆசை மனக்குரங்கே! - உன்றன்
ஆட்சி ஒழிந்ததுபார்
காசு பணங்களெல்லாம் - வெறுங்
காகிதக் குப்பை;கண்டேன்.

சூதுபொய் வஞ்சனைகாள் - உங்கள்
சூழ்ச்சி பலிக்காது
நீதிமெய் நேர்மைகளே - கொண்ட
நிச்சய ஞானமுற்றேன்

வெற்றி எனும்வெறியே! - உன்னை
வென்று விழுங்கிவிட்டேன்
மற்றொரு யார்இனிமேல் - என்
மனதைக் கலைத்திடுவார்?

ஆறி அமர்ந்துவிட்டேன் - அருள்
ஆண்டவன் சன்னதிமுன்
தேறித் தெளிந்தஎன்னை - எந்தத்
தீவினை என்னசெய்யும்?

# 13 காவிரி

(பெ. தூரன்)

பூவார்சோலை மயிலாடப் புரிந்து குயில்கள் இசைபாடக் காமர் மாலை அருகசைய, நடந்துவரும் காவிரித்தாயின் மெய்யழகில் உள்ளம் பறிகொடுத்து நிற்கிறார்கள் திரு. பெ. தூரன் அவர்கள். வண்டுகள் இசை பாட, வண்ண மலராடை கட்டிக், கயல்மீன் விழி திறந்து, கடுகிநடக்கும் பொன்னியாறு, வரப்பேறி வளம்பரய்ச்சி, பொழிலேறி எழில் சிந்தி, தமிழ்த்தாயை ஊட்டுகின்றது. சோலை புகுந்து, சுந்தரப்பூக்கொய்து, இன்பத்தேனருவியாடி, மந்தமாருதம் நுகர்ந்து தீங்குழலூதி, தெம்மாங்கிசைத்து சிந்தை மகிழ்ந்த, தமது இளமைக் கால நிகழ்ச்சி நினைவை எழுப்பிச்செல்லும், இந்தக் காவிரியை கவிஞரவர்கள் 'வாயாரப்' பாடுகின்றார்கள். பழைய சாடியில் புதிய கவிதை மதுவைப் பொழியும் திரு. தூரன் அவர்களின் கவிதை மாறாத சுவை கொண்டது. இதை தமிழர்க்கு விருந்தாக வைக்கின்றோம்.

இளமைக் கனவுத்தேன்
என்னுளத்தே பாய்ச்சிவிட்ட
வளமை சுரந்துவரும்
வளர்வனப்புக் காவிரியே!

வெள்ளைமணற் பரப்பினிலும்
விரியுமலர் மருங்கினிலும்
துள்ளுபுனற் பாட்டினிலும்
தோழருடன் நான்களித்த

கனலெழுப்பும் சீரிளமைக்
காலத்தை எண்ணியெண்ணி
மனங்குழைந்து நிற்கின்றேன்
மறதியென்றுங் கொண்டதில்லை;

மணற்கோட்டை எத்தனையோ
மனக்கோட்டை எத்தனையோ
அணிற்பிள்ளை கனைப்போல
ஆடல்களும் எத்தனையோ?

கன்னிக்கவின் மாருத
காவிரிப்பூங் கவிப்பெண்ணே
என்னென்ன நினைப்புகளோ
என்னென்ன ஆசைகளோ

கொள்ளத் துணைபுரிந்தாய்
கூட்டின்பச் சுவையேறக்
கள்ளமிலா உள்ளங்கள்
கலந்திடவே நடப்புரிந்தாய்;

பத்துடனே ரைந்தாண்டு
பறந்துவிட்ட பின்னரின்று
கத்துகுயிற் குழலிசையின்
களிப்போங்க நடக்கின்ற

உன்றனைநான் காணவந்தேன்
உணர்ச்சியெலாம் மீண்டனவே
அன்றுகண்ட குமரியடி
அதிலொன்றும் ஐயமில்லை;

நந்தா எழிலரசி
நாணமுடன் உடல்வளைத்துச்
சிந்தா முறுவலுடன்
செல்கின்றாய் காவிரியே

எண்ணமெலாங் கொண்டுவந்தாய்
எண்ணிளமை கொண்டுவந்தாய்
தண்ணமுதம் தனக்குருசி
தான்கொடுக்கும் தோழமையில்

கூடியவர் தமையெல்லாம்
கொண்டுவந்தா லாகாதோ?
வாடியிங்கு நான்தனியாய்
வருந்துவதைக் காணுயோ?

மூன்றுடலும் ஒருயிராய்
முடிந்தபெரு நட்பினுக்குச்
சான்றுனைப்போல் யாருண்டு
சாய்பொழுதின் காலமெல்லாம்

முடிவில்லாப் பேச்சினிலும்
மோனஉளத் துடிப்பினிலும்
வடிகின்ற பேரன்பை
வரையாது பார்த்தாயே!

உன்னழகு நீண்டதுபோல்
உளத்துடிப்பும் நீண்டிருக்க
மன்னியவெம் பிரிவினில்நான்
மயங்குகின்றேன் காவிரியே!

# 14 பேராசைக்காரி

## (கம்பதாஸன்)

திரு கம்பதாஸன் அவர்களின் 'பேராசைக்காரி' என்னும் இக் கவிதையில், நினைவுப் பாதையில் கண்டுபிடிக்கப்படும் காட்சிக் கவிதையிலே மறைந்துள்ள தத்துவரேகைகள் கலந்திருக்கின்றன. விரிந்து கிடக்கும் வானத்தைவிடச் சுருங்கி இமைப்போதில் துடித்து மறையும் மின்னலிலே அதிக தத்துவம் - கவிதை உண்டென்பது இவர்கள் கருத்து.

'எண்ணத்தின் சுழலிலே குமிழ்விடும் கவிதை ஒரே நொடியில் வானவில்லைப்போன்ற வர்ணஜாலத்தையும், கொலையாளியின் கையி லிருக்கின்ற வாளைப்போன்ற கூர்மையையும் பெற்றுப் பரிணமிக் கிறது. அந்தநேரம், காலத்தின் இரகசிய மொழிகளில் ஒன்றை வியாக்கியானம் செய்கிறது' என்று இவர்கள் சொல்கிறார்கள்.

'கம்பதாஸன் நவயுகத்தின் தலைவாசலில் நிற்பவர், அவரது கவிதை காவியதெய்வத்தின் அபூர்வ வார்ப்படத்திலே புதுக்குர லின் தெளிந்த தொனிப்பு' என்று இவர்கள் கவிதையைப்பற்றி உலகம் புகழும் கவிஞர் ஹரீந்திரநாத் சட்டோபாத்யாயா அவர் கள் சொன்னபிறகு வேறு என்ன சொல்லவேண்டியதிருக்கிறது?

பொங்கும் கடலென யானிருந்தால் - அவள்
பொன்மணற் கரைஎனப் புணரவராள்;
கங்குல தாகவே யானிருந்தால் - அவள்
கள்நில வாகிக் கலக்கவராள்!

துயிலும் விழிஎன யானிருந்தால் - அவள்
சொர்ப்பன மாகிச் சுகிக்கவராள்
பயிர்வளர் வயலென யானிருந்தால் - அவள்
பரிவொடு வரப்பென பக்கம்வராள்!

தெண்ணீர்த் தடாகமாய் யானிருந்தால் - அவள்
செம்மல ராகியேச் சேரவராள்;
விண்ணின் விரிவென யானிருந்தால் - அவள்
விந்தை அமைதியாய் மருவவராள்!

காட்டாளி வில்லென யானிருந்தால் - அவள்
கணையென வந்து அணையவராள்;
பாட்டாளி மகனென யானிருந்தால் - அவள்
பட்டினி வயிறென ஒட்டவராள்!

# 15 புன்சிரிப்பு

## (ந. பிச்சமூர்த்தி)

மறுமலர்ச்சிப் பூங்கொம்பில், ஒருகாம்பிலுள்ள இரண்டு மலர்கள் திருவாளர்கள் கு. ப. ராஜகோபாலனும், ந. பிச்சமூர்த்தியும். இவர்களில் சாவுத்தேவி, விதியின் ஆணையால் திரு ராஜகோபாலனைத் தனது மடியில் மறைத்துக்கொண்டாள். அவர் மறைந்த கோலத்தைக் கண்டு சோக கீதம் இசைத்தவண்ணம் உருகி நிற்கிறுர் திரு பிச்சமூர்த்தியவர்கள்.

பிச்சமூர்த்தியவர்கள் யாப்பை கவிதைக்கு ஒருவிலங்காகக் கருதுபவர்கள். இவர்களின் வசனகவிதைகள் வேதாந்தக் கோபுரத்தில் நர்த்தனமிடும் வர்ணக்கொடிகள். சிந்தனைக் கனவுகளிலும், சித்தாந்த நினைவுகளிலும், உணர்ச்சிக் குவியல்களிலும் இவர்கள் கவிதையை உருவாக்குகின்றுர்கள். 'புன்சிரிப்பு' என்னும் இக்கவிதையில் இப்பண்புகள் விளங்கக்காணலாம்.

சின்னஞ் சிறுவிரல்கள்;
சிங்காரத் தாமரைகள்,
கண்காணுப் பூப்பறித்துப்
பூஞ்சோலை காட்டையிலே;
சின்னஞ் சிறுகால்கள்
சொகுசான செம்மின்னல்,
வான்தாங்கக் கால்தூக்கி
விந்தைவலி பயிலையிலே;
நாவல்பழம் போன்ற
நீச்சற்ற நீலவிழி
வெண்சுவத்தின் மேலேறிச்
சிரித்துஎழில் கொட்டையிலே;
"சிற்றுயிரே! என்கண்டாய்,
சிரிப்பதேன்" என்றேன்

விடை

சிதம்பரமாம் சிறுவெளியில்,
கருக்குழியாம் குகையினுள்ளே
ஓங்கார ரூபத்துடன்
ஒலியற்று இருந்துவந்தேன்;
சுழலாத திகிரியைப்போல்
தனிஉயிரின் தன்மையற்று
வயல்நீங்கிக் குடமாக
களியாய் இருந்துவந்தேன்.
வேளைவந்து சங்கொலிக்கச்
சிறைநீங்கி வாசல்வந்தேன்;
ஒளிஅலையின் ஊர்வலங்கள்
சிறைவாயில் மின்னிவர
என்விளக்குச் சுடரேற
ஊர்வலத்தில் ஒன்றிவிட்டேன்.
ஒளிகூசச் சிலநாட்கள்
சிந்தனைநா னற்றிருக்கப்
பரபிரும்மம் என்றுஎன்னைப்
பலரும் புகழ்ந்துவந்தார்.
இன்றுமுதல் எங்கிலுமே
ஆதிஒளி ஆடிவர,
சுவர்களிலும் முகங்களிலும்
சூழ்த்திரையாம் வெளிகளிலும்
ஆதிப்பொருள் நடனம்
கண்டமுதம் உண்டுவரேன்
ஆதிஎழில் கண்டதிலே
அமுதுண்ட இன்பத்திலே
மலர்ந்துவரும் இச்சிரிப்பு
நடராஜப் புன்சிரிப்பு. . .

# 16 நனவாக வேண்டிய கனவு

## (கு. இராமலிங்கன்)

திரு. கு. இராமலிங்கன் அவர்கள் ஓர் இளம் கவிஞர். தமிழன்னையின் ஆசைகளையெல்லாம் பூர்த்தி செய்ய அல்லும் பகலும் உழைத்துவரும் தமிழ்ப் பண்ணையிலேயே இவர்கள் தமிழ்ப் பணியாற்றி வருகின்றார்கள். இவரின் கவிதைகள் உள்ளத்திலும் நரம்பிலும் தமிழ்த் துடிப்பேற்றும் தன்மை வாய்ந்தவை. இவரது கவிதைகளை நம் இதயத்தில் மங்கி எரியும் தமிழ்த் தீபத்திற்கு வார்க்கப்படும் எண்ணெய் எனலாம். தமிழ் இளைஞர் அனைவரும் திரு. இராமலிங்கம் போன்று இதயத் துடிப்பைப் பெறுவார்களாயின் தமிழன்னை தளை நீங்கி முடி தாங்குவாளன்றோ? இவரது கனவும் நனவாகுமன்றோ?

தமிழ்நாடு உலகோடு சமமாக நின்று
　　தலைதூக்கி நிலைபெற்று வளமாக வேண்டும்
அமிழ்தான தமிழோசை நம்நாட்டிலன்றி
　　அயல்நாடு சென்றங்கும் புகழ்வீச வேண்டும்
'எமதன்னை! எமதன்னை!! எமதன்னை!!!' என்றே
　　எல்லோரும் விழிப்புற்றுச் செயல்செய்ய வேண்டும்
நமதன்னை தளைநீங்கி முடிதாங்கி வாழ
　　நாமொன்று சேர்ந்தின்று எழுந்தாக வேண்டும்

நூற்றுக்கு நூறாகத் தமிழ்நாட்டு மக்கள்
　　நூல்செய்யும் பேராற்றல் பெற்றோங்க வேண்டும்
சோற்றுக்கும் ஆடைக்கும் குடிலுக்கும் ஏங்கித்
　　துயருற்று வாழ்ந்திடல் வீழ்ந்திட வேண்டும்
கூற்றுக்கு மஞ்சாத நெஞ்சூக்க முள்ள
　　குணமிக்க பலமிக்க இளமக்கள் வேண்டும்
ஆற்றுக்கும் ஊற்றுக்கும் நிகராகக் கவிதை
　　அயராது பொழிகின்ற கவிமக்கள் வேண்டும்

அச்சம் நமைக்கண்டே யஞ்சிட வேண்டும்
அறியாமை அறியாது வாழ்ந்திட வேண்டும்
பிச்சையென் றொருமகன் கேட்டிட் லாலே
'பிடி' யென்ன ஈவது இலையென்ன வேண்டும்
மெய்ச்சுடர் ஆண்பெண்கள் வதனங்கள் தோறும்
வீசிச் சிறந்திடச் செய்திட வேண்டும்
இச்சகத் துள்ளவர் யாவரும் நம்மை
இன்தமிழ் மக்களென் றேத்திட வேண்டும்

மலையைக் கலைவளர் மன்றம தாக்கி
மண்ணை மலர்ச்சோலை கழனிக ளாக்கிக்
குலைவாழை சென்னெல் கரும்புக ளெங்கும்
குறைவின்றி நட்டுச் செழித்திடச் செய்து
அலைகடல் சேர்கின்ற நதிகளை எல்லாம்
ஆயிரம் ஆயிரம் கால்களில் பாய்ச்சி
நிலையாக அழகாகத் தமிழ்நாடு சேர்ந்து
நித்தியகு டும்பமாய் வாழ்ந்திட வேண்டும்!

# 17 பூவையர்க் கிரங்கும் புள்ளினம்

## (P. S. சிவம்)

திரு. P. S. சிவம் அவர்கள் ஒரு சீர்திருத்தக் கவிஞர். இவரது கவிதைகளிலே சீர்திருத்த மணம் கமழ அறியலாம். கீழ்வரும் கவிதைகளில் ஒரு பெண்ணை நோக்கி வண்ண மணிக் கிளியொன்று கூறும் வாசகங்கள், பெண்ணடிமையையும் அவர்கள் அடைந்துள்ள இழி நிலையையும் நன்ருக விளக்குவனவாம். கவிதையிலே இரக்கப் பண்பும், பரிவும் நன்ருக பரிணமிக்கின்றன.

வண்ணப் பூஞ்சோலையிலே - எனக்கு
வாய்த்த நாதருடன்
பண்கள் பலபாடிச் - சந்ததம்
பரவச மடைவோம்!
எண்ணும் இன்பவாழ்வில் - நாங்கள்
என்றும் மகிழ்ந்திடுவோம்!
மண்ணில் வாழ்மாதர்களே - உமைப்போல்
வாழ்வதை யாம்விரும்போம்!

புள்ளினம் என்றுரைப்பீர் - எம்மைப்
புன்மொழி யாலிகழ்வீர்!
எள்ளிடும் வாழ்வெமக்கோ - உமக்கோ?
எண்ணி டுவீர்சிறிதே!
குள்ளச் செயல்புரியோம் - பிறர்க்குக்
கொடுமை செய்தறியோம்!
கள்ள உரைபுகலோம் - நாங்கள்
கற்ற தியற்கைநெறி!

ஆயும் அறிவுடையோம் - எனநீர்
ஆணவம் பேசிடுவீர்!
தேயும் மதிபோல்உம் - மாண்பு
தேய்வதை நீரறியீர்!
நாயும் விரும்பாத - அடிமை
வாழ்வினில் நாளெல்லாம்
ஓயுத லின்றிநீங்கள் - மிகவே
உழைப்பதைக் காணீர்!

சந்தையில் மாடுவாங்கும் - ஒருவன்
தரகு விலைதந்து
சொந்தமாய்க் கொண்டதின்பின் - அதனல்
சுகம்பெறக் கண்டோம்!
அந்தவிதம் நீங்கள் - ஊணும்
ஆடையும் பெற்றிடவே
சொந்த மதியிழந்தீர் - ஆண்கள்
சுகப்பொறி யாளீர்!

என்ன நலங்கண்டீர்? - உரிமை
யாது பெற்றுள்ளீர்?
கன்னல் மொழியுடையிர் - அதனைக்
கழற முன்வருவீர்!
அன்ன நடைநடப்பீர்! - பற்பல
அணிகள் பூண்டிடுவீர்!
பின்னல் சடைமுடிப்பீர் - ஆனல்
பேதமை விட்டகலீர்!

விந்தை யொன்றுகேட்பீர் - உம்மை
வீழ்ந்தபிறப் பென்றும்
நிந்தைக் குரியரென்றும் - புகல்வர்
நீரும் அதைஒப்புவீர்!
எந்த உலகினிலே - இதுபோல்
ஏழை மதிகண்டீர்?
சுந்தர மாதர்களே - எமது
சுதந்திரங் காணீர்!

ஆணுக்குப் பெண்ணடிமை - உண்டோ
அதைநீர் ஏற்றதினல்
மாணுற்ற பெண்ணுலகுக் - கரிய
மாசினை யுண்டுபண்ணீர்!
நாணம் மிகுந்தவரே - இதற்கு
நாணுதல் ஏன்மறந்தீர்?
வீணுரை பேசுவதோ?-உமது
வீழ்ச்சி நிலையறிவீர்!

பக்தியினில் மிகுந்தீர் - சடங்கு
பற்பல செய்கின்றீர்!
பக்தியும் செய்சடங்கும் - உமது
பழிப்பை நீக்கிடுமோ?
மிக்க துயர்களைவீர் - தமிழ்
மேன்மை நிலையறிவீர்!
தக்க பணிபுரிவீர்! - உயிராம்
தன்மானம் காத்திடுவீர்!

# 18 சிறை மீட்போம் வாரீர்!

## (ப. சுந்தரவேலன் B. T.)

கவிஞர் திரு. சுந்தரவேலன் அவர்கள் இக்கவிதையில் முன்னாளில் தமிழர்கள் கண்டிருந்த உயர்வும், இந்நாள் அவர்கள் அடைந்திருக்கும் இழிவும் விளக்குகின்றார்கள். அத்துடன் அவர்கள் தமிழ்த்தாயின் சிறைமீட்க நம்மை அழைக்கின்றார்கள். கவிஞரின் லட்சியமும் தீர்க்கதரிசனமும் பின்பற்றிச் செல்லத்தக்கவையாகும்.

சேரசோழ பாண்டியர்கள் ஆட்சி யின்கீழ்
சீர்மையுடன் வாழ்ந்துவந்த நமது முன்னோர்
வீரமொடு ஒழுக்கநிறை கல்வி செல்வம்
வியாபாரம் இல்வாழ்க்கை காதல் தன்னில்
பேருற்று விளங்கிவந்தா ரந்த நாளில்
பேதமில்லை சாதிமதப் பேய்கள் இல்லை
போரில்லை நமக்குள்ளே வாத மில்லை
பொறுப்புடனே நம்நாட்டை நாமே ஆண்டோம்!

இன்றைக்கோ தமிழரெலாம் இழிந்த தன்மை
எப்படியோ ஏற்றுவிட்டோம்! ஏய்க்கப் பட்டோம்
மென்மேலும் பேதத்தால் பிளவு பட்டு
வெறுப்புணர்ச்சி கொள்கின்றே மதனை விட்டே
ஒன்றாக இங்குள்ள மக்க ளெல்லாம்
ஒப்பற்ற நல்வாழ்வு விளைவ தான
நன்னாளை எதிர் நோக்கி யுழைத்தால் நாட்டை
நன்றாக நாமாற்றக் கூடு மன்றே?

நோயறிந்து மருந்துண்டால் குணமே யுண்டு
நோயினுக்கு நோன்பிருந்தால் குணம தாமோ?
நேயமுடன் நாமெல்லாம் ஒன்று கூடி
நேர்மையுடன் நன்முறையைக் கடைப்பி டித்தே
மாயிருள்சேர் வைதீகக் கொடுமை தீர்த்து
வாழ்வினிலே நல்லின்பம் ஒளிரச் செய்து
தூயதொரு புத்துலகம் அமைய வேண்டித்
தொல்தமிழ்த்தாய் சிறைமீட்போம் வாரீர்!வாரீர்!

எல்லோரும் ஓர்குலமென் றுரைத்தல் வேண்டும்
ஏழையிலை தமிழ்நாட்டில் என்று சொல்லக்
கல்விதொழில் வாணிபமும் பெருக்க வேண்டும்
கடும்பஞ்சந் தீர்த்திடுநல் திட்டம் வேண்டும்
எல்லாரும் இந்நெறியை யறிந்து ழைத்தால்
இங்கிலாந்தி லிருப்போர்க்கிங் கென்ன வேலை?
சொல்லாமல் அவர்நாடு செல்வ ரன்றோ?
தோழர்களே! நாமுயன்றால் முடியா தொன்றோ?

# 19 காலைப்பாட்டு

## (வித்வான் க. சிதம்பரநாதன்)

திரு. க. சிதம்பரநாதன் அவர்கள் ஓர் சிறந்த தமிழறிஞர். எப்போதும் இவரது உள்ளமென்னும் வண்டு சங்கக் கவிதைப் பூஞ்சோலையிலே மதுவுண்டு கீதம் இசைத்துக் கொண்டிருக்கும் 'காலைப்பாட்டு' என்னும் இக்கவிதையில் இவர் தம் கற்பனையின் விரிவைக் காணலாம். கவிதை எளிமையும், இனிமையும் நிறைந்து இனிய தென்றல்போல் மனோஹரமாய்ச் செல்கின்றது. கவிஞர் சிருஷ்டித்த இந்த அற்புதக் காலையிலே நாமும் ஆனந்தமாகப் பாடி எழுவதுதானே!

போது புலர்ந்ததம்மா! - துயின்றது
போதும் எழுந்திடம்மா!
காதிற் பறவைகளின் - இன்னிசைக்
கானம் குடையுதம்மா!

சேவல்கள் கூவுதல்கேள் - காக்கைகள்
சேர்ந்து கரைவதுகேள்!
கூவுங் குயில்ஒலியும் - பிறவும்
கூடி ஒலிப்பதுகேள்!

மீனினம் ஓடினபார் - திங்களும்
மேல்கடல் பாய்ந்ததுபார்
மானத் திருள்சிறிது - சிறிதாய்
மங்கி வெளுத்ததுபார்!

ஆயிரம் கைகளினல் - இருளே
அள்ளி விழுங்கிடவே
ஞாயிறு கீழ்கடலின் - புறமே
நின்று மெழுவதுபார்!

தாமரை நங்கையுளம் - மகிழ்ந்து
தண்ணறுந் தேன்சுமந்தே
காமரப் பாடகரின் - இன்இசை
கண்டு விருந்திடல்பார்!

முற்றம் தெளித்திட்லாம் - சுத்தமாய்
முற்றும் பெருக்கிடலாம்
கற்ற பலகோலம் - வரைந்து
கண்டு மகிழ்ந்திடலாம்

காலைக் கடன்முடித்தே - இறைவன்
காலைப் பணிந்திடலாம்
வேலை களிற்புகலாம் - உறக்கம்
விட்டு எழுந்திடம்மா!

# 20 குமரி முனை

(வித்வான் சு. உமைதாணுபிள்ளை)

மனிதன் தனது வாழ் நாளில் எவ்வளவோ சம்பவங்களில் சம்மந்தப்படுகின்றான். அவையொட்டி அவனது உள்ளத்தில் பலவித உணர்ச்சிகள் தோன்றுகின்றன. அவ்வுணர்ச்சிகளைச் சிலர் தம்முள்ளேயே அனுபவிக்கின்றனர். இன்னுஞ் சிலர் தாமடைந்தவற்றைப் பிறரடையவும் முயற்சி செய்கின்றனர். இவர்களுள் ஒருவர்தான் திரு. உமைதாணு பிள்ளையவர்கள்.

இவர் எழில் நடம்புரியும் குமரித் துறையைப் பார்க்கின்றார். இக்காட்சியில் இவரது கவிதை உள்ளம் பொங்கி விடுகின்றது. அழகுணர்ச்சியில் மூழ்கிய இவர் இதைப்பற்றிக் கவிதையும் பாட ஆரம்பிக்கின்றார். இனிய சுனையில் சுரந்து சாடும் தீஞ்சுவைத் தண்ணீர்போல இவரது கவிதை இனிக்கின்றது. ஆழ்ந்த கருத்தும் தெளிவும் கொண்டு கவிதை சிற்றாறுபோல் என்ன அழகாகச் செல்கின்றது! தமிழர் இதைக் காண்பதுதானே!

மூன்று கடலும் மோதும்முனை
முத்தை யள்ளிக் கொழிக்குமுனை
தோன்றி மறையும் இருசுடரின்
ஜோதியில் நாளும் சொக்குமுனை,

ஆர்த்தே அலைகள் ஆடும்முனை
அகில மனைத்தும் அறிந்தமுனை
தீர்த்தம் பலவும் சிந்துமுனை
தீரா நோயும் தீர்க்குமுனை.

பாப மனைத்தும் போக்குமனை
        பார்ப்பவ ருளத்தைப் பறிக்குமனை
தேவி பகவதி கன்னிகையாய்த்
        தினமும் தவஞ்செய் தென்முனையே

சித்திரை மன்னர் ஆளுமனை
        செல்வி குமரி வாழும்மனை
நித்தம் மக்கள் கூடுமனை
        நில்லா தலைகள் ஆடும்மனை.

வந்து தங்கிச் செல்வோர்க்கு
        வரிசைக் கேற்ற இடமுண்டு
எந்த நாளும் வெறியூட்டும்
        இன்பக் காட்சி பலவுண்டு.

குளிக்கத் துறைகள் பலவுண்டு
        கும்பிடக் குமரிக் கோயிலுண்டு
சுழிக்கும் கடல்கள் சூழவுண்டு
        சுகந்தரு காற்று நிதமுண்டு

கண்ணுற் காண வாரீரோ
        கண்டு களித்துச் செல்லீரோ?
மண்ணிற் குமரித் துறையதுபோல்
        வாய்த்த முனையும் வேறுண்டோ?

# 21 கவிதை மலர்

## (தில்லைக்கூத்தன்)

*திரு 'தில்லைக்கூத்தன்' அவர்கள் இயற்கையிடம் அளவு கடந்த பற்றுடையவர். இயற்கையன்னை வேளாவேளை அழகு சிந்தப்புரியும் நடனத்தைக்கண்டதும் இவரது உள்ளத்தடத்திலே கவிதை அரும்பி மொட்டாகி விரிகிறது. இத்தகைய கவிதை, கவிதை மலர் என்னும் இக்கவிதையிலே உருவாவது மிகவும் அற்புதமாகவே இருக்கிறது!*

**மலையருவி முரசொலியில், மாமரங்க ளார்ப்பில்,**
**மயில்நடத்தில் குயிலிசையில் மான்பிணைகள் நோக்கில்**
**விலைமதியா இளம்பிடிகள் விரும்புவிளை யாட்டில்**
**வாமரிகள் புலிகரடி வழங்கிவரு முழக்கில்**
**நிலையுடைய மணிச்சுனையில் நறியமலர் வனப்பில்**
**நீள்கொடிகள் செடிகளொடு நேர்பின்னற் கிடப்பில்**
**கலையருவி பாய்ந்திடவே கவியுளமாந் தடத்தில்**
**கவிதையெனு முகைமலர்ந்து கமழ்கந்தம் பரப்பும்!**

**காலைமலர் வண்டுமுரல் கமலமல ரழகில்**
**கட்டவிழும் மொட்டுடைய கடிகயத்தின் பொலிவில்**
**மாலைமலர் முல்லையொடு மகிழ்செந்நெற் செய்யில்**
**மண்டுபனி நீரோடை வளைந்தோடும் போக்கில்**
**சோலைமலர் வருதென்றல் சிறுபுட்கள் ஒலியில்**
**சேருநிழல் சென்றெய்தத் தருமின்பக் களிப்பில்**
**வேலையினில், மோதலையில், வெண்மணலார் கரையில்**
**வான்புலவர் மனமேவ வளர்கவிதை யுருவாம்!**

காலையெழுஞ் செம்பரிதி கார்முகிலைக் கிழித்தே
கண்டுயிலைப் போக்கிவரும் கனகமணி ஒளியில்
நீலநிற வான்பரப்பில் நாண்மீன்கள் சூழ
நெஞ்சமதை யள்ளிவரும் நிலவுமதி யுலாவில்
கோலமிகு கிளிமொழியார் காதல்நிலை யாலே
கருத்ததனில் கருவாகும் கவலைமொழி தன்னில்
சீலமிகு கவிஞரது சிந்தையினில் நின்றும்
சீர்பெருகும் கவிதைமலர் செறிந்துவெளி யாமே!

# 22 புயலும் படகும்

**(கலைவாணன்)**

*கவிஞன் வாழ்விலுள்ள பல சிக்கல்களை உண்மையாக உணர்த்துகின்றான். மனித சமூகத்திற்கு அவன் படிப்பினையை நல்குகின்றான். ஆனால் ஆசிரியன் நல்கும் முறையிலன்று. ஆசிரியன் நல்கும் முறை வேறு. கவிஞன் நல்கும் முறை வேறு. கவிஞன் தான் கொடுக்கும் படிப்பினையை மிகவும் இன்பமாகக் கொடுக்கின்றான். அவனது படிப்பினையால் மனித சமூகம் விரைவில் உணர்ச்சி பெறுகின்றது; உலையாத வலுப் பெறுகின்றது; உயிர் பெறுகின்றது; ஆனந்தம் அடைகின்றது.*

*திரு 'கலைவாணன்' அவர்கள் 'புயலும் படகும்' என்னும் இக்கவிதையில் வாழ்வின் இயல்பைச் சித்தரித்துக் காட்டுகின்றார். வாழ்க்கை என்னும் கடலிலே கவிஞர் எண்ணமென்னும் சிநேகத்துடன் யாத்திரை செய்கின்றார். இன்பமென்னும் மீன்களை வேண்டி ஆசையென்னும் தூண்டிலை வீசுகின்றார். கடைசியாக 'விதியென்னும் வெம்புயல் வீறிட்டு வீசயில், வினையிருள் அறிவொளி வீழ்ந்திடச் சூழயில், கதியற்று வாழ்க்கையாம் கடலுக்கு மத்தியில், கட்டுண்ட என் மனக் கப்பல் நிலைக்கவோ?' என்று இவர் கேட்கின்றார். இக் கவிதையைக் கற்பனைக் களஞ்சியம் என்றே சொல்லவேண்டும். கவிதையில் உண்மையான பாவமும் கருத்தும் களிநடம் புரிகின்றன.*

காரிருட் சாளரக் கதவைக் கிழக்கிலே
காலையின் பொன்னொளிக் கைகள் திறக்கவும்
பாரினைச் சூரியன் பார்த்துக் களித்திடப்
பகலென்ற தேரிலே பவனிக்கு ஏறினான்.

ஓர்நொடிக் கோர்முறை உலகை மயக்கிட
ஒப்பிலாப் புதுப்புது ஓவியம் பற்பல
கார்கொண்ட கிட்டிசைக் காட்டக் கணித்ததால்
கடலும் குதூகலக் கானம் இசைத்தது.

கண்ணைப் பறித்திடும் வண்ணக் கதிர்களால்
கத்தும் அலைக்கெலாம் முத்தம் கொடுத்தெழும்
விண்ணின் விளக்கிடம் விட்டில்கள் தாவல்போல்
விரைகின்ற படகுகள் கரையைக் கடந்தன.

நாற்றுக்கு வித்திட நஞ்சையில் பூட்டிய
நல்லே ருழவர்கள் செல்லேர் நடத்தல்போல்
காற்றுக் கிசைந்திடக் கட்டுற்ற பாயுடன்
கடல்நீரை யுழுமவை கண்முன் நடந்தன.

தரையினின் றுயிரில் தாவித் திரைக்கரந்
தாங்கத் தவழ்ந்துபின் தானே மறைந்திட
விரைகின்ற படகிலே வலைகொண்டு செல்பவர்
விந்தையைக் கண்டஎன் சிந்தை சுழன்றது.

எண்ணற்ற ஆசைகள் என்னுந் திரைக்குலம்
இரைகின்ற வாழ்வெனும் இணையற்ற கடலிலே
எண்ணச் சினேகனும் என்னேடு வந்தனன்
இருவரும் படகினில் ஏறிக்கி ளம்பினேம்

எட்டாத இன்பமாம் எண்ணற்ற மீன்களை
எல்லாம் பிடித்திடும் பொல்லாத ஆசையால்
கட்டாத மனமென்னும் கப்பலை ஓட்டினேன்
கையிலே மயல்வலைக் கட்டுங் கிடந்தது

வெள்ளலை ஆயிரம் வீசிடும் நீரிலே
வெள்ளிச் சலாகையை வீசிக் களித்தபின்
மெள்ளக் களைப்பினுல் மேற்றிசைப் பொந்துளே
மேவிய வெய்யிலோன் தாவிப்பின் ஓடினுன்

விடியாத முன்னமே வேலைக்கு வந்தவர்
வெங்கதிர் மேற்கிலே வீழ்ந்திடும் மட்டிலும்
முடியாத ஒன்றிலே முன்றிக் கிடந்தனர்
முடிவில் இருள்வரப் படகைத் திருப்பினர்

மேற்றிசை வெய்யிலை ஆற்றிக் கரைக்கவும்
மேகங்கள் கூடிவிண் மீதில் உலாவின
கூற்றின் சிரிப்பெனக் காற்றும் கனத்தது
கூதலாய் நின்றுபின் புயலாகி விட்டது.

அலைகொண்ட நீரிலே அலைகின்ற மீன்களை
வலைகொண்டு வீசல்போல் வாழ்வென்ற வாரியில்
விலைகொண்ட இன்பெனும் நிலைகொண்ட மீன்களை
வேண்டியென் ஆசையாம் தூண்டிலை வீசினேன்

கற்பனை இன்பமோ காதலா லாவது?
காட்சியிற் பட்டதை கண்ணுள் நிறுத்தவோ?
சொற்பனம் துயிலுடன் சோர்வதே யல்லவோ?
சொல்லென்ற கூண்டிலே சுவைவந்து தேங்குமோ?

பித்துற்ற வானிலே கத்திச் சுழன்றிடும்
பேயொத் தெழும்புயல் பாயத் தொடங்கவும்
தத்தும் அலைக்குலம் தாவும் தரங்கமோர்
தலையற்ற உயிரென நிலைகெட்டு நின்றது

படபட வெனுமிடிப் பற்றுற்ற வானகம்
சடசட வென்றதும் சாரலும் மழையுமாய்
மடமட வெனவிழ மாந்தர்கள் மேனியே
வெடவெடத் திட்டது விட்சித் தொடக்கமோ!

தூக்குந் திரைக்கரந் தாக்கிக் கவிழ்க்கவும்
துடிதுடித் திடுகடல் மடிமீ தலைந்திடும்
போக்கற்ற படகிலே புண்பட்ட நெஞ்சுடன்
புகலற் றலைந்தவர் போய்நீரில் மாண்டனர்

விதியென்ற வெம்புயல் வீறிட்டு வீசயில்
வினையிருள் அறிவொளி விழ்ந்திடச் சூழயில்
கதியற்று வாழ்க்கையாங் கடலுக்கு மத்தியில்
கட்டுண்ட என்மனக் கப்பல் நிலைக்கவோ?

புண்ணுற் றுளப்புனை பொட்டென்று சாய்ந்தது
போக்கற்று மயல்வலைத் தூக்கித் தொடர்ந்தவென்
எண்ணத் துணைவனும் கண்முன் விழுந்தனன்
இதயப் புயற்குமுன் எவரென்ன செய்வது?

துள்ளிடும் மீன்களை அள்ளிடக் கையிலே
தூண்டில் கொணர்ந்தவர் மாண்டன ராயினும்
உள்ளம் ஒடிந்தும் இவ்வூனுடல் தாங்கிநான்
உங்களுக் கிதுசொல இங்கே இருக்கிறேன்.

# 23 நிலக்கரியும் வைரமும்

## (உல்லாசன்)

*சுவர்க்கீய Dr. திரு. முகம்மது இக்பால் அவர்கள் உலகம் புகழும் சிறந்த கவிஞர். இஸ்லாமியச் சமூகக் கூட்டுறவுக்காக இவர் பெரிதும் பாடுபட்டவர். ஆத்மீகத் துறையில் இவருக்கு மிகுந்த நம்பிக்கை உண்டு. தமது வாழ்நாளில் இவர் வேதாந்த வீணையை மீட்டி இன்பம் அனுபவித்து இறப்பற்ற சாசுவத உலகத்தில் நடம் புரிந்துகொண்டிருந்தார். உலையாத உறுதியும் தளராத நம்பிக்கையும் மனித சமூகத்திற்கு இவர் தமது கவின் பொழியும் கற்பனைக் கவிதைகளின் மூலமாக அடிக்கடி போதித்து வந்தார். கீழ்வரும் கவிதைகளிலும் இந்த இயல்பு நன்றாகப் பெருக்கெடுத்தோடுகிறது. திரு. உல்லாசன் அவர்களின் மொழிபெயர்ப்பு தேனின் சுவைபோல் இனிவு கொண்டு, மூலத்தின் நயத்தை அப்படியே தெளிவாக்குகின்றது.*

இப்பொழுது சத்தியத்தின் இன்னுமொரு
வாதலைத் திறக்கின்றேன்
இன்னுமொரு கதைகூறுகின்றேன்.

சுரங்கத்திலுள்ள நிலக்கரி
வைரக்கல்லிடம் கூறியது.

“நீ என்றும் அழியாத
தேஜஸைப் பெற்றிருக்கிறாய்
நாம் தோழர்கள்; நம் உடல்ஒன்று
நம்வாழ்க்கையின் உற்பத்தியும்
ஒன்றுதானே!

ஒன்றுக்கும் உதவாதவன்
என்றுமனம் புழுங்கி
நான்மாளும் பொழுது
நீ மன்னர்களின் மகுடங்களை
அலங்கரிக்கிறாய்!
என் அம்சம் வெறும் மோசமானதினால்
மண்ணைவிடவும் கேவலமாக
மதிக்கப் படுகிறேன்!
உன்னாலோ கண்ணாடியின்
இதயத்தையும் துண்டுபடுத்துகிறது
எனதுகருமை தீச்சட்டிக்குத்
துலக்க மூட்டினாலும்
இறுதியில் நான்சாம்பலாய்த்
தானே ஆகிவிடுகிறேன்.
ஒவ்வொருவரும் அவர்பாதங்களால்
என்தலையில் மிதிக்கிறார்கள்
என்வாழ்க்கை யையும்சாம்பலால்
மூடிவிடு கின்றார்கள்.
என்விதியை நான்நோகத்
தானே வேண்டும்!
என்வாழ்க்கையின் சாராம்சம்தான்
என்ன? உனக்குத் தெரியுமா?
நீயொரு புகையிலையின்
கட்டி; தீச்சுடரின்
அம்சத்தை யெல்லாம்
ஏற்றுப் பெற்றவன்.
உருவத்திலும் தன்மையிலும்

விண்மீனைப் போல,
ஜோதி உனைச்சுற்றிலும்
ஜுவாலை வீசுகிறது.
நீமன்னவரின் கண்மணிச்
சுடராக இலங்குகிறாய்;
கட்டாரியின் கைபிடியையும்
அலங்கரிக் கிறாய்''
வைரக்கல் கூறிற்று
''அறிவுள்ள நண்பனே!
இருண்டமண் கட்டியாகி
மகத்துவத்துடன் கல்லாகிறது.
சுற்றுச் சார்புடன்
போரிட்டுப் போரிட்டு
போராட்டத்தால் முதிர்ச்சிபெற்று
வைரத்தைப்போல உறுதிபெறுகிறது.
இந்தமுதிர்ச்சியே என்உருவத்தையும்
என்இதயத்தையும் பிரகாசத்தால்
நிறைத்து விட்டது.
முதிர்ச்சி அடையாததால்நீ
புறக்கணிக்கப் படுகிறாய்
உன்உடல் மிருதுவாக
இருப்பதால்நீ எரிக்கப்படுகிறாய்
பயத்தையும் துயரத்தையும்
சஞ்சலத்தையும் அறவேயகற்றிவிடு.
கல்லைப்போல உறைப்பாயிரு,
வைர மாய்விடு.
யார் கடினமாக உழைக்கின்றார்களோ

விடாப்பிடியாக இருக்கிறார்களோ
ஈருலகமும் அவர்களால்
பிரகாச மடையும்
'கபா'விலிருக்கும் அக்கருமைக்கல்லின்
உற்பத்திகொஞ்சம் மண்ணிலிருந்துதான்
சீனய்மலையை விடவும்
அதற்கு மகத்வமுண்டு.
அழகுள்ளோராலும் ஏனையோராலும்
அதுமுத்த மிடப்படுகிறது.
உறுதியிலேயே வாழ்க்கையின்
மகத்துவ மிருக்கிறது.
பலவீனம் ஒன்றுக்கும்
உதவாமை; முதிர்ச்சியின்மை.

# 24 உதயம்

## (நாஞ்சில்)

*உதயகாலே உடலுக்கும் உளத்திற்கும் எவ்வளவு உணர்ச்சியை ஊட்டுகின்றது! இளந் தென்றல், மகரந்தம் அளைந்து நமது மேனியை வருடும்போது நாம் அளவற்ற ஆனந்தமடைகின்றோம்! ஒளி உடையணிந்து காலைக்கன்னி கடலிலும், ஆற்றிலும், குன்றிலும், பசுமைச் சோலையிலும் நடனஞ் செய்வதைக் கண்டு பறவைகளெல்லாம் தமது இசைக் குரலால் கூவி இந்த உலகத்தையே அமர உலகாக்கிவிடுமே! உயிரினங்கள் புதுமை இன்பத்தில் பொலிவுற்று களிக்கும் காட்சிதான் என்ன! திரு 'நாஞ்சில்' அவர்கள் தமது பண்பட்ட கவிதை நடையால் இதை ஓவியமாய்த் தீட்டிக் காட்டுகின்றார்கள். கவிதையிலே இசை பொங்கி வருகின்றது.*

**திக்குவெ ளுத்ததென்று சேவற் குலங்களெல்லாம்**
**கொக்கொக்கோ வென்றிறக்கை - குயிலே**
**கொட்டி யெழுப்புதடி.**

**ஆகாய வுதயமதி னழகைக் கண்டின்புறவே**
**காகா வெனக்கரைந்தே - குயிலே**
**காகம் பறக்குதடி.**

**நீலக் கடற்றிரையின் நெஞ்சம் கிழித்தழகாய்க்**
**காலை இளம்பரிதி - குயிலே**
**காட்சி யளிக்குதடி.**

கொள்ளை இளமுறுவல் கொண்ட கமலமலர்
மெள்ள யிதழ்விரித்தே - குயிலே
விரிந்தழ கூட்டுதடி.

சோலைப் பழமரத்தைச் சுற்று மிளங்கொடிகள்
காலைப் பொழுதுவரக் - குயிலே
கண்டு மலர்சொரியும்

மன்னு முதயமகள் வரக்கண்ட பூஞ்செடிகள்
புன்னகை செய்தழகாய்க் - குயிலே
பூத்தெழில் காட்டுதடி.

எல்லா உயிர்களும் எழும்பித்தன் வேலைசெய
வல்லே யெழுமினென்றே - குயிலே
வந்தே வெயிலடிக்கும்

ஈட்டி யனையநெடு எண்ணிற் கதிர்க்கரத்தால்
நீட்டிக் கதிரவனும் - குயிலே
நிமிர்ந்துயர் கின்ருனடி.

# 25 காமம்

## (வேலன்)

*திரு 'வேலன்' அவர்கள் ஓர் இளங்கவிஞர். கற்பனை உலகில் பறந்து திரியும் இவரது உள்ளம், வாழ்க்கையைச் சின்ன பின்னப்படுத்தும் பல விஷயங்களைப் பற்றியும் ஓயாது சிந்தனை கொள்ளுகின்றது. காமம் என்னும் இக்கவிதையில் காமத்தின் கொடுந் தன்மைகளை நன்றாக விளக்கிச் செல்கின்றார் கவிஞர். கவிதையில் நயம் கனிந்து சிறக்கிறது.*

தாமரைப் பொய்கையிலே - ஒருநாள்
தனித்தி ருக்கையிலே
காமக் கிழத்திவந்தாள் - என்னைக்
கட்டித் தழுவிக்கொண்டாள்

"ஆசை சிறிதுமில்லேன் - எனக்(கு)
அல்லல் விளைக்காதே
மோச மிச்செய்கையாகும் - அம்மா
மோகத்தை நல்காதே

உள்ளம் தளர்ந்ததம்மா - என்றன்
ஊக்கம் குலைந்ததம்மா
கள்ளம் சிறிதுமில்லேன் - என்னைக்
கஷ்டப் படுத்தாதே!

வில்லம்பு கட்டாரி - எனநீ
மேனியுள் சென்றிடுவாய்
கொல்லவுன் கண்போல - அம்மா
கொடிய நஞ்சுமுண்டோ?

உள்ளம் மயங்கவைக்கும் - உன்றன்
உலையா மார்பெல்லாம்
கொள்ளை யிடுவதுவோ? - மனதைக்
கொன்றுதான் தின்பதுவோ?

காற்றில் நடம்புரியும் - உனது
கருமைக் கூந்தலெல்லாம்
கூற்றுவன் கைக்கொள்ளும் - உயிரைக்
கொல்லும் கயிருகும்!

ஆசை யிதுமோசம் - என்றே
அகன்று வாழ்ந்தாலும்
வேசை மனத்துடனே - என்னை
விரும்பிக் கொண்டாயே!

சந்தனத் தட்பமெனும் - காதலை
தள்ளி ஒதுக்கிவிட்டு
வெந்தழல் காமத்தினை - எனக்கு
விருப்பில் பூசினையோ?

கல்லும் கொதித்துவிடும் - கொடிய
காமத்தீ பட்டுவிட்டால்
எல்லுந் தொலியுமுள்ள - நானும்
எப்படி வாழ்ந்திடுவேன்.

கண்ணும் கலங்கிவிடும் - கண்ணே
கன்னம் கசங்கிவிடும்
உண்ணும் உணவெல்லாம் - எனது
உடலைப் பற்றிடுமோ?

# 26 ஒற்றுமையின் வெற்றி

(S. சிவராமன்)

திரு சிவராமன் அவர்களின் இப்பாலர் பாடலில் 'ஒற்றுமையால் முடியாதது ஒன்றுமில்லை' என்ற தத்துவம் விளக்கப்படுகிறது. எலிகள் முட்டையைப் பற்றிச்சென்ற கதை இக்கவிதையில் படமாகக் காட்சியளிக்குந் தோற்றம் கண்டு களிப்பதற்குரியதாகும். பாலர்களுக்கு இப்பாடல் மிகவும் தித்திக்கும் என்பதே நம் நம்பிக்கையுமாகும்.

செட்டியார் வீட்டி னறையினிலே - சற்றும்
சிந்தை யில்லாமலே வைத்திருந்த
முட்டையைக் கண்ட இரண்டெலிகள் - அதை
முயற்சியில் களவாட எண்ணியதே

ஓரெலி மல்லாந்து கால்பரத்தி - சற்றும்
ஓசை யில்லாமல் கிடந்திடவே
ஓரெலி முட்டை யதன்மீது - தள்ளியே
ஊக்கமாய்ப் பற்றிடக் கூறியதே

ஊக்கமாய் முட்டையைக் கால்களினுல் - அதும்
ஊக்க முடனேயே பற்றிடவே
ஊக இவ்வெலி அவ்வெலியின் - வாலை
ஊன்றி யிழுத்து நடந்ததுவே

ஏக மனதொடு சென்றதனுல் - வெற்றி
எலிக ளடைந்தது விந்தையிலை.
ஊக மில்லாதவை வேறுபட்டால் - அங்கே
உண்மையில் சாவினை எய்துமடா.

# 27 கண்ணியல்

## (A. நாராயண பிள்ளை)

திரு. நாராயணபிள்ளை அவர்கள் அழகாகக் கவிதை பாடும் கவிஞராவர். அமைதி நிறைந்த கிராமத்திலமர்ந்து, இயற்கைத் தாய் கொலுவிருக்கும் கோலத்தைக் கண்டு இவர் எத்தனையோ கவிதைகள் பாடியுள்ளார். அவை அவ்வப்போது பல பத்திரிகைகளில் வெளிவந்திருக்கின்றன. இவற்றைப் பலர் நன்றாக அனுபவித்துப் பாராட்டியுள்ளார்கள்.

கீழ்வரும் கவிதை கண்ணைப்பற்றி கவிஞர் பாடியதாகும். இவ்வுலக எழிலரங்கத்தைக் கண்டு ஆனந்தம் எய்துவதற்கும் இன்னும் பல புதுமையினைக் கண்டு ஆச்சரியம் அடைவதற்கும் துணை செய்வது கண். அறிவைப் பெருக்கிக் கொள்வதற்கு கண்ணில்லையேல் மிகவும் கஷ்டமாய்ப் போய்விடும். இவையும் இன்னும் கண்ணின் பல இயல்புகளும் இந்தக் கவிதைகளில் நன்றாகப் பிரதிபலிக்கின்றன.

எல்லையிலா இயற்கைத்தாய் எழில்காட்டும் கண்ணே
ஈசனருள் திறமையெல்லாம் எடுத்தியம்பும் கண்ணே
தொல்காப்பி யம்முதலாம் தென்மொழி நூல்யாவும்
துருவிப்ப டித்துணரத் துணைசெய்யும் கண்ணே

உடம்பினிலெங் கேனுமொரு ஊனமது உற்றால்
உன்றனுக்கே வந்ததுபோல் உருகியழுங் கண்ணே
இடுக்கணொருக் காலுனக்கே ஏற்பட்ட போதில்
இதுவரையில் உனக்காக இரங்கியதார் கண்ணே

உள்ளவற்றில் ஒருசிறிது உயர்ந்துவிடு மாகில்
உற்ருரும் ஏனுக்குத் தெரிவதில்லே கண்ணே
வெள்ளம்போல் வந்தபொருள் வந்தவழி மீண்டால்
வேற்ருரும் உறவினராய் விளங்குவதேன் கண்ணே

பெண்முகத்தில் நீயிருக்கும் பெற்றிமையால் தானே
பார்வையிலே கொல்லும்விதம் பயின்றுவிட்டாய் கண்ணே
கண்ணன்னர் கண்ணும் கழற்கரிய நோயைக்
கணப்பொழுதில் உண்டாக்கும் கருணையற்ற கண்ணே

பிணமானின் பார்வையினல் பித்தியாக்கும் கண்ணே
பேதையராம் பெண்முகத்தில் பிறந்ததுமேன் கண்ணே
இணைபிரியா அன்பருக்கும் இயப்பரிய நோயை
இமைப்பொழுதில் உண்டாக்கும் ஈரமற்ற கண்ணே

அன்பிற்கே உகந்தவர்கள் ஆருயிரை நீத்தால்
அருவிபோல் நீர்பொழியும் அன்பார்ந்த கண்ணே
என்புருகிக் கண்ணிரை இதுவரையில் இறைத்தும்
இறந்தோர்பின் என்றேனும் எழுந்தாரோ கண்ணே

துரும்பொருகண் வீழ்ந்தால் துன்புறுமிரு கண்ணே
தொன்றுதொட்டு உங்களன்பு தழைத்தவிதம் என்னே
இருகண்கள் சேர்வதுபோர் இனமென்ருல் பின்னே
இடையிலுள்ள மூக்குப்நீர் இழிவதுமேன்? கண்ணே

மூக்குக்கண் ணூடிக்குள் முழிமுழிக்கும் கண்ணே
முகமூடி வந்தவிதம் மொழியாயோ கண்ணே
போக்கின்றிக் கிழவர்தான் போடுகிறார் என்றால்
பிள்ளைகளும் அவ்வழியின் பற்றுவதேன் கண்ணே?

விரலாலே வெங்காயம் கிழித்தாலுன் மேனி
வெய்துயிர்த்து நீர்ததும்பும் விதமென்ன கண்ணே
விரலிலுள்ள வெங்காயம் வந்துன்மே லெங்கேனும்
வெங்காயப் படுத்தினதோ விளம்பிடுவாய் கண்ணே?

காரியத்தைச் சாதிக்கக் கருதும்பெண் யார்க்கும்
கணப்பொழுதில் கண்ணீரைக் கொடுத்துதவுங் கண்ணே
கோரியதைக் கணவன்மார் கொடுத்தவுடன் தானே
கண்ணீரை மறைக்கும்விதம் கழறுயோ கண்ணே

எம்பெருமான் சன்னதியில் இமைமூடுங் கண்ணே
எளியவரை ஏறிட்டுப் பார்த்தாலென் கண்ணே
கும்பிக்குக் கூழின்றிக் காய்வோரைக் கண்டு
கிருபைசெய நோக்குதலே கேண்மையாம் கண்ணே

# 28 அருவியன் காதை

(K. N. சிவராஜ பிள்ளை)

காலஞ்சென்ற திரு K. N சிவராஜ பிள்ளையவர்கள் தமிழுக்குச் செய்துள்ள தொண்டு என்றும் மறக்கற்பாலதன்று. இவரது ஆராய்ச்சித்திறனும், கவிதா சக்தியும் பண்டிதரும் கொண்டாடும் பண்பு நிறைந்தவை.

இவர் எழுதிய நூற்கள் பல. இவற்றுள் வெளி வந்தன சில. இன்னும் வெளிவராதிருப்பன அநேகம். அவற்றுள் ஒன்று 'அருவியன் காதை' என்பது. இது ஒரு கிரேக்கக் கதையாகும், இதைப் பிள்ளையவர்கள் சுமார் 40 வருடங்கட்கு முன்னேயே தமிழாக்கித் தந்திருக்கின்றார்கள். அதில் ஒரு பகுதியே கீழ் வருவது.

மங்கை உயிரன்ன மணவாளன் வரநோக்கிப்
பொங்குமதி கண்டகடல் போன்றுபொழில் யாவும்
கொங்குவிரி வாவிகளும் கோடுவிரி குன்றும்
அங்கருவி வீழ்தடமும் ஆர்வமுடன் ஆர்த்த.

கொம்பர்இடை வைகும்இளங் கோகிலமும் ஒல்லை
பைம்புனலில் மூழ்கிஇசை பற்பல விரிக்கும்,
அம்பினிடை தூங்கிஅறி வோங்குமது நாரை
தம்பெடையி னேடுமகிழ் தந்தொலி தெரிக்கும்

மெல்லி தழ்விரி பூந்துணர் மேவிய
வல்லி கள்இவர் மாட்டு நுடங்கலோ
முல்லையம் முறுவல் உருதேசி தன்
இல்லையென் னிடையின் றெழில் ஏய்தலே.

"நாறு பூங்குழல் நங்கையைப் போலொரு
வீறு வாய்க்கப் பெற்றேம்"என மென்கொம்பர்
ஊறு தேனும் ஒளிமலர் வாசமும்
தேறிச் சிந்தின; செப்பும் தரத்தவோ?

நாடி நாள்மலர் நாயகன் உள்ளொடு
சூடி நின்றஅத் தோகையும் தோன்றல்பால்
ஓடிச் சென்றே உள்மகிழ் வோடுரை
யாடிச் சென்ற தறையகிற் பாமினி.

தீதகன்ற தெளி வுறுஞ் சிந்தையும்
ஏதமில் குணம் யாவும் பொருந்துவீர்!
போதுவிண்ட அப்பூம் பெடை வண்டொடு
வாதுண்டே தும்பிக்" கென்றமட மயில்.

தன்னை நோக்கித் "தனியிருட் சோலைவாய்
மன்னு மாமணம் வாழ்மலர்க் கூந்தலாய்!
நின்னை நீத்துணேன் என்று மதுகரம்
பின்னைப் போவதைப் பார்"எனப் பேசினன்.

"கள் அவிழ்க்கும் கமலமென என
துள் அவிழ்க்கும் ஒளிமுகத்தீர்! குயில்
கிள்ளை பேசவும் கேட்டுத் தமிழிசை
விள்ள லாததென்" என்ன வினவினள்.

என்னின் பூநடு ஏந்தும் குவளைபோல்
அன்விக் கொண்ட அழகுகண்ணாய்! மடப்
பிள்ளைபேசும் அன்றிப் பெரியோர் முனே
உள்ளதோர்ந் தவரும் உரை செய்வரோ?"

என்று கூறிய இன்மொழி தன்செவி
ஒன்றலும், உள்ஒதுங் கினள், நாணினள்.
நின்ற காந்தனை நீத்துக் கடிதொரு
மன்றலங் கொம்பர் ஊடுமறைந் தனள்.

கொம்பின் பூவும் கொடியினப் பூக்களும்
பம்பிக் கற்றை பரப்பலில் பைந்தொடி
செம்பொன் மேனியும் சின்ன முறுவலும்
அம்பர் தேற்றி அறியகிற்பார் எவர்?

அன்ன காலை அருவியன் ஆயிடைத்
துன்னி வேறொரு மாற்றம் தொடுத்தனன்;
மின்ன னிர்முனம் மெய்உரை செய்வதும்
என்ன வாமென இத்துணை ஓர்ந்திலேன்"

இவ்வுரை எரியூட்டும் இழுதென
நவ்வி நோக்கினள் நாணம் வளர்க்கவும்,
ஒவ்வும் என்ற உருக்கிளர் கைக்கொடே
"அவ்வண் நோக்குதிர்" என்றழைத் தாள்திரு.

# 29 பேறு

## (செந்தாமரை)

பேனா முனை இந்த உலகத்திற்கு எவ்வளவு தூரம் பயன் பட்டு வருகின்றது! அரசியல் அறிஞர்கள் கையாள்வதும் பேனா முனையை. நீதிபதிகள் தமது நீதியினை பேனா முனையின் வாயிலாகவே தீட்டுகின்றார்கள். கலைஞர்கள் உள்ளத்தில் பெருக் கெடுக்கும் உணர்ச்சி வெள்ளம் இந்தப் பேனா முனையில் உரு வாகும்போது இவ்வுலகம் எவ்வளவு ஆனந்தம் அடைகின்றது!

தீர்க்கதரிசனமூட்டும் கவிதைகள்; அறிவுச் சுனையாய் விளங்கும் கட்டுரைகள்; வாழ்க்கைச் சம்பவத்திலே ஒரு புது மையைப் பெருக்கிக்காட்டும் நல்ல கதைகள்; கற்பனையைக் கொண்டு, இவ்வுலகை அமர உலகாக ஆக்கிவைக்கும் அழி யாக்காவியங்கள் ஆகிய பலவும் இப்பேனா முனைச் சேவை யாலன்றோ நமக்குக் கிடைத்திருக்கின்றன! ஆகவே திரு 'செந் தாமரை' அவர்கள் கூறுவதுபோல 'அறிவினை வளர்ப்பதற்கும், அறத்தினைக் காப்பதற்கும்' இந்தப் பேனாமுனையே உதவுகின்றது. செந்தாமரை அவர்களின் இக் கவிதையிலே நல்ல பாவமும் கற்பனையும் வெள்ளம்போல் பொங்கிப் பாய்கின்றன.

ஒருதுளி இங்கிக் கிந்த
உலகினி லுள்ள மக்கள்
தரும்பெருஞ் சிறப்பை எல்லாம்
தெரிந்துடன் எழுது கின்ற
அரும்பெரும் பேறு இந்த
அவனியில் உதயங் கன்னி
சிரிப்புடன் தோன்றி என்றும்
சுடரொளி சிந்தச் செய்யும்.

பெரும்பெரும் கருத்தை எல்லாம்
பிழிந்தெடுத் துலகி லுள்ளோர்
புரிந்திடும் முறையில் நல்கப்
பிரியமோ டுழைக்கும் நல்ல
அருந்திறல் கலைஞன் உள்ளம்
உவப்புடன் ஓடி வந்தே
அருவிநீர் வீழ்ச்சி போல
அழகுநீர் பாய்ச்சும் போது,

சிவபிரான் சடையில் கங்கை
தவழ்ந்துபின் பாய்வ தொத்துக்,
கவின்மிகு விரல்கள் தம்மைக்
களிப்புடன் தொட்டு முத்தித்
தவநிலை பெற்ற பேறு
தரும்சிறு நுனியில் தங்கின்,
புவியெலாம் பாய்ந்து நல்ல
பெரும்பலன் உண்டு பண்ணும்.

இதயமாம் வீணை தன்னில்
எழுந்திடும் நாதம் இங்கே
குதித்தெழும் குரலி னூடு
குழைந்திடும் போதில் நல்ல
கதிதரும் சொற்கள் சாடிக்
கரைபுரண் டோடி வந்தே
மதுவென வடியுங் காலை
விருப்பமோ டதனை யள்ளி

சிறுசிறு எழுத்துக் குள்ளே
சிறப்புட னடைத்து வைத்தே
உறுதியாய்க் காக்க நன்றாய்
உதவிடும் பேறு தன்னைத்
திறமையோ டோட்டு வித்தால்
சிறந்தநற் பலன் கிடைக்கும்
தறித்துடன் முறித்து விட்டால்
செகமெலாம் இருண்டு சாகும்.

சிறந்தஓர் சித்தி ரத்தைச்
சிறுகதை ஒன்றிற் காட்டிப்
பிறந்தநாட் டழகை யெல்லாம்
பெருமையோ டதனில் ஏற்றிப்
பிறமொழிப் புலவர் கண்டு
பெரிதுமே வியக்கச் செய்யும்
திறமையில் சிறந்த பேறு
செல்வத்துட் சிறந்த செல்வம்.

பழமையில் புதுமை காட்டிப்
புதுமையில் பழமை காட்டும்
அழகிய நாட கங்கள்
அவனியில் மக்கள் வாழ்வு
பிழைபடச் செய்யும் பொல்லாப்
பழிச்செயல் தம்மைப் போக்க
எழுத்தினில் குழைத்த நல்ல
எழில்தரும் நவீனம் இன்னம்

மின்போல்கட் டுரைகள் கால
வரம்பினை மீறி நின்று
மனிதனைப் புனித னாக்கும்
மிகப்பெருங் காவி யங்கள்
எனப்பல இலக்கி யங்கள்
இயற்றிஇங் கிறந்து போகும்
அனைவரும் அமரத் தன்மை
அடைந்திடச் செய்யும் பேனா.

சிறகடித் தொருநொ டிக்குள்
செகத்தினைச் சுற்ற வல்ல
பறவையின் முதுகி லேறிப்
பறந்திடும் கற்ப னைக்கு
நிறமளித் துயிர ளித்து
நிறைந்தநற் பொலிவ ளித்துச்
சிறப்பளிக் கின்ற பேனா
சுடர்மிகு வாளை யொக்கும்

அறிவினை வளர்ப்ப தற்கும்
அறத்தினைக் காப்ப தற்கும்
சிறுமதி ஈன்ற தீயின்
சுவாலையை வளர்த்து மக்கள்
வெறியினில் தம்மைத் தாமே
வெட்டியே வீழ்த்திப் போரில்
இறந்துல கழிவ தற்கும்
இந்தவாள் உதவும் தம்பி!

# 30 காலம் காட்டும் வழி

(சி. எஸ். சுப்பிரமணியன்)

திரு சுப்பிரமண்ணியன் அவர்கள் ஏழை மக்களிடம் அளவுகடந்த கருணை உடையவர். கீழ்வரும் கவிதைகளிலே இவர் ஒரு ஏழையின் வாழ்வை சிருஷ்டித்துக்காட்டுகின்றார். கருணையும், நன்றியும், நியாயமும் நேர்மையும் மறைந்த இந்த வையகத்திலே உணவில்லையெனில் அதற்காக வஞ்சம், பொய், புனைவு, களவு முதலிய எதுவும் செய்யலாம். அதில் குற்றமில்லையென்பதை இவர் தமது பாத்திரத்தின் மூலமாகக் காட்டுகின்றார். இச்சித்தாந்தம் மிகவும் பாராட்டற்பாலதே.

காலை எழுந்தவுடன் - கால்கள்
காட்டும் வழிதனிலே
வேலை வேலையென்றே - விரைவாய்
வேர்த்துச் சென்றிடுவேன்

கால்கள் கைகளுண்டு - எனக்குக்
காணும் கண்களுண்டு
மேலும் மேன்மையுற - ஆசை
மிகுதி யாகவுண்டு

விறகும் வெட்டிடுவேன் - எந்த
வேலையும் செய்திடுவேன்
சிறகு கட்டியேனும் - சீமை
செல்லவும் சித்தமையா!

மேனி வளர்த்திடநான் - எந்த
வேலை செயத்துணிந்தும்
ஏனென வறியேன் - எனக்கு
என்றும் பசிப்பிணிதான்

உடலம் தளர்ந்திடவே - சிறிதிங்
கோய்வும் வேண்டாது
கடவுள் காத்திடுவார் - என்றே
காலம் கழித்தேனய்யா!

உண்மை வழிதனிலே - செல்லும்
உத்தம வாழ்வினிலே
உண்ண உணவுமில்லை - உறங்க
ஓலை நிழலுமில்லை

கஞ்ச முகமுடையாள் - எனது
கண்ணெனும் பொற்சிறுமி
கொஞ்சு மொழியுடையாள் - களிப்பில்
கூத்திடும் கண்ணுடையாள்

மாலைப் பொழுதினிலே - காணும்
மஞ்சள் வெயிலினிலே
கோல மிட்டுநிற்கும் - என்றன்
கோகில சுந்தரிதான்

காலைப் பிடித்திடுவாள் - எனது
களைப்பைத் தீர்த்திடுவாள்
சோலைத் தென்றலென - இனிதாய்ச்
சொக்க வைத்திடுவாள்

பொன்முகம் நான்காணில் - எனக்கும்
போயிடும் தீப்பசியே
என்முகம் கண்டாலோ - அவட்கே
ஏக்கம் ஓங்குதய்யா!

இன்று பட்டினிதான் - என்றே
எங்ஙனம் நான்புகல்வேன்
ஒன்று மறியாத - பேதை
ஒடுங்க நான்சகியேன்

விதியும் உண்டாமால்? - பசியை
வெல்ல முடிந்திடுமோ?
மதியும் உண்டாமால் - எனது
மானமும் ஓடுதையா?

வஞ்சம் பொய்புனைவு - திருட்டு
மாயை சாலமெல்லாம்
நெஞ்சில் ஈரமின்றி - செய்வேன்
நிச்சயம் வெற்றிகொள்வேன்

காலம் காட்டும்வழி - வேறு
கண்ணுக் கெட்டுதில்லை
ஞாலத் திலேயின்று - வெற்றி
நல்லவர்க் கில்லையையா!

# 31 தாண்டவக் காட்சி

## (S. ஆதிமூலப்பெருமாள்)

*திரு ஆதிமூலப்பெருமாள் அவர்கள் ஓர் சிறந்த ஓவியக் கலைஞர்; உள்ள உணர்ச்சியினை வர்ணத்தால் சுடரேற்றி, உரு வந்தீட்டி அதைக்கண்டு ஆனந்திப்பவர் இவர். ஆனால் இப் போது அவ்வுணர்ச்சியினைக் கவிதையாகச் சித்திரித்துக்காட் டுவதற்தும் இவர் வந்துள்ளார். இயற்கைத்தாயின் சௌந்தரிய நடனத்தைக்கீழ்வரும் கவிதைகளில் காட்டுகின்றார். அவைகளில் இறைவனின் கூத்தையும் விளக்குகின்றார்.*

**வேலையில் நின்று மாந்தர் விடுதலை யடையும் நேரம்;**
**காலையில் உதித்த வெய்யோன் கதிரழல் தணியும் நேரம்;**
**மாலையை யாட்சி செய்ய மன்மத னெழுந்த நேரம்**
**சோலையி னழகு காணச் சொகுசுடன் சென்றேன் தோழி!**

**கண்ணினுற் கண்டே னம்மா கவர்ந்தது புலனை யெல்லாம்**
**எண்ணினு ளுள்ளம் பூக்கும் இறையுரு முன்பு தோன்றும்**
**மண்ணிலிவ் வரிய காட்சி மறக்கவு மரிது கண்டு**
**புண்ணிய மடைந்தே னந்தப் புதுமையைக் கேட்பா யம்மா!**

**தூதுசெல்நார தன்யாழ் தூக்கிநன் கிசைத்தல் போல**
**தாதுறை மலர்க்குத் தூது தாங்கியே சென்று கந்தப்**
**போதினில் மதுவை யுண்டு பொழுதினைப் போக்கும் வண்டு**
**காதினிற் கினிய வீணா கானமங் கிசைக்கக் கேட்டேன்**

திசைமுகன் பாடித் தாளம் சிறப்புற யிடுதல் போல
வசையறக் குயில்கள் பாட வானிலே யுயர்ந்து தம்மின்
தசையினைச் சுமந்து பாயத் தகுமிற கில்லாப் போத்து
குசையிடை இருந்து தாளம் குரலினற் போட்ட தம்மா!

முத்தனைச் சுமக்கும் நந்தி முழவினை அடிப்ப தொத்தே
இத்தரை செழிக்க வானின் றிறங்கிடு மழைகொள் மேகம்
சித்திர மாக நின்று செவ்வனே செப்பும் ஓசை
மத்தள அடியாய் என்றன் மனத்திடைக் கண்டேன் தோழி!

சரிந்துயர் மயிலின் கொண்டைச் சடைமுடி போலும்,வானில்
விரிந்துயர்ந் தடர்ந்த தோகை வெளிப்படுஞ் சோதிபோலும்,
பரந்தசீர் இறக்கை கையின் பான்மையைப் போலும்,நீலம்
தெரிந்திடு கழுத்து சிவனர் கழுத்தினைப் போலும் கண்டேன்!

சங்கரா வென்று கையைத் தலையினிற் கூப்பி நின்றேன்
புங்கவர் போல புட்பம் பொழிந்தன மரங்க ளெல்லாம்
இங்கிதப் பறவை யெல்லாம் இரைந்திரைந் தேத்த, வாங்கு
தங்கியே நானும் ஈசன் தாண்டவங் கண்டே னம்மா!

இறைவனின் பதத்தை யென்றும் எண்ணியே இறைஞ்சு
வோர்க்குத்
தரையுறு பொருளும் மற்றும் தற்பர மயமாய்த் தோன்றும்
செறிவுறு முலகி னாட்டம் சிற்பரன் நடமாய்த் தோன்றும்
அறிவுட னுய்ந்தால் நீயும் அவனியிற் காண்பாய் தோழி!

## 32 அன்னை

(தே. ப. பெருமாள்)

பாரினில் பாரத அன்னையும்
பழமையில் மிகுந்தவள்; உயர்ந்தவள்;
சீரெலாம் நிறைந்தவள்; திருவளி
திறமெலாம் கொண்டவள்; செழித்தவள்;
நேரெலாம் படைத்தவள்; நிமிர்ந்தவள்;
நிறையினை உயிரெனப் பெற்றவள்;
ஊரெலாம் வாழ்ந்திட உதவினள்;
உலேவினைப் பெற்றனள்; வாடுவள்!

ஊக்கமும் வலுவும் உடையவள்
உழைப்பிலே யமுதம் உண்டவள்;
வாக்கிலே நலத்தினை நவின்றவள்;
வாணியின் நல்லருள் பெற்றவள்;
ஆக்கமும் அமைதியும் அமைந்தவள்;
அழகெலாம் திரண்டவள்; ஆண்மைத்
தேக்கமாய் நின்றனள்; எமதுயர்
சிந்தையில் வாழுநல் லன்னையே!

பொறையினள்; தயவினள்; அன்புமே
பொங்கியே வழியும் நெஞ்சினள்;
மறையினள்; ஞானமாம் மலையினை
வளர்த்தனள்; பொல்லாப் பாதகர்
கறையினைப் போக்கவே வழியினைக்
காட்டிய மைந்தரைப் பெற்றவள்;
துறையெலாம் உயர்வினைக் கண்டவள்
துலங்குநல் வீரப் புகழிலே!

சுனையும் வாவியும் அருவியும்
சோலையும் சூழவே பெற்றவள்;
கனிகள் தேனுடன் கிழங்கெலாம்
கருதியே அள்ளி நிறைப்பவள்;

தினையுடன் நெல்லுயர் தானியம்
செழிப்பிலே நல்கிக் களிப்பவள்;
புனித ஆவினம் ஆடுகள்
போற்றவே தரும்பா லூற்றையே!

நோயினைப் போக்கவே மருந்தினை
நுவலுவள்; நல்கியே காப்பவள்;
ஆயிரம் ஆயிரம் பண்ணிசை
ஆழியில், அருவியில் புள்ளினம்
கூவிடும் குரலினில்க் கொட்டுவள்;
குழந்தையின் மழலையில் நல்குவள்;
பாய்ந்திடும் சுரும்பினப் பாட்டினில்,
பரவிடும் ஒலியினில் தருவளே!

சந்தன வாசம் தென்றலில்
தங்கியே தவழ்ந்திடும்; வானக
அந்தரந் தன்னிலே அணிநிலா
அழகிய சுட்டியாய் அமைந்திடும்;
சுந்தரத் தாரகை கூந்தலில்
சூடிடும் மலரெனத் தோன்றிடும்
வந்திடும் கதிரவன் அன்னையும்
வைத்திடும் முகுடமாய்க் காணுமே!

மணத்தினைப் பூவினம் நல்கிடும்;
மதுவினை வண்டினம் உண்டிடும்;
குணத்தினை நதிகளும் கூட்டிடும்;
குன்றுடன் மலைகளும் மழையினைத்
தணுத்திடச் சிந்திடும்; சங்கினம்
தாளமே உயிர்த்திடும்; சந்த
அணியினுக் குதவிடும் தங்கமும்
ஆருயிர் அன்னையின் பணியிலே!

## 33 இன்றைய நிலை

(தே. ப. பெருமாள்)

உண்ணவழி யின்றியெமன்
உலகேகும் வறியவரை
எண்ணியுளம் நைந்திடுமே!
இருவிழிநீர் கக்கிடுமே!

கொடுங்கொள்ளை நோயரக்கன்
கூத்தாடி மக்களையே
தடத்தினிலே விழவைக்கும்
சங்கடத்தை என்னென்போம்!

வழியெல்லாம் பிணக்குவியல்;
வருங்கழுகு நாய்நரிக்கிங்
கொழியாத உணவுண்டாம்
உடன்மாற்றும் நிலையில்லை!

இறந்தவர்கள் தொகையெண்ண
இயலாதாம் மனிதர்களால்,
சிறந்தவொரு கருவியினல்
தெரிந்திடுவா ரிக்கணக்கை!

மயங்கிவிழும் மதலைகளின்
வருத்தத்தைச் சகியாதே
தயக்கத்தால் பிரிந்தகலும்
தாய்மாரைக் கண்டோமே!

குழந்தைஉயிர் காக்கின்ற
கோதில்லாச் சேவைக்குப்
பழுதற்ற கற்பெல்லாம்
பாழாக்கி விட்டாரே!

தொழிலாளர் போராட்டம்;
துறையெல்லாம் மனமாற்றம்;
அறிவனைத்தும் பெற்றோமே!
ஆக்கங்கள் சிதைந்தனவே!

சண்டையுடன் தர்க்கங்கள்
தாக்குகின்ற கொடுமூர்க்கம்
மண்டியதால் வாழ்வின்பம்
மாய்ந்தொழிந்து போயிற்றே!

பேசுதற்கும் அதிகாரம்
பெற்றிடுதல் வேண்டுமென்று
நாசத்தை என்சொல்வோம்
நாவற்ற உயிரோநாம்!

தாய்நாட்டில் பற்றுடைய
தங்கமொழில் மாணவர்க்கிங்(கு)
ஒய்வில்லாக் கொடுஞ்சிறையோ?
உருவழிக்கும் இழிநிலையோ?

தலைவரெல்லாம் சிறைசென்றார்
தக்கவழி காண்பதற்கும்
நிலையின்றி வாடுகின்றோம்
நெடுமூச்சை உயிர்க்கின்றோம்!

தலைவர்வரும் நாளென்றோ
தளையென்று மாய்ந்திடுமோ?
உலைவகற்றி இன்பூட்டும்
உரிமையென்று வாய்ப்பதுவோ?

---

முற்றும்

ராசர் பல்கலைக்
அவ்வை
சண்முகம் நூலகம்
தமிழியல் துறை

இப்போது எல்லோரும் பேசிக்கொள்வது எதை?

# 'தேவி' தமிழிசை மலரையே.

மறுமலர்ச்சிப் பூங்காவில் அற்புத சிருஷ்டியாய் உருவாகும் மலர்

*'வானத்தில் மின்னல் உருகிப் பாய்வதுபோல்*
*இசை உள்ளத்தினின்றும் உருகிப் பாயவேண்டும்'*
*இதையும், இதுபோன்ற தமிழிசை சம்பந்தமாய்ப் பல*
*விஷயங்களையும் தாங்கி வெளி வருகிறது.*

**விலை ரூபாய் 2**

'தேவி' காரியாலயம் ❖ நாகர்கோவில்

---

**வஞ்சி சோப்ஸ்**

வஞ்சி பார் சோப்ஸ் 707
வஞ்சிப் பிரகாஸ் சோப்
காமதேனு போரக்ஸ்
கேஸரி நீலம்
இந்திரா டாய்லட்
மற்றும் சோப் தினுசுகள்

**வஞ்சி ஹாண்ட் லூம் டெக்ஸ்டயில்ஸ்**

கைத்தறி சேலைத் தினுசுகள்
வேஷ்டிகள், மலையாள நேரியல்
தாங்கள், ஜரிகை அங்க வஸ்தி
ரங்கள் மெல்லிய ஆடைகள்

★ கிடைக்குமிடம் ★

**தி ஸென்ட்ரல் டிரேடிங் அன்ட்**
**மான்யூபாக்சரிங் கார்ப்பரேஷன் லிமிடெட்,**
கோட்டாறு, நாகர்கோவில்.

---

கவலை தீர்ந்தது.

**காட்லிவர் ஆயில் கிடைக்கவில்லை என்று?**

இதோ **ஷார்க் லிவர் ஆயில்**

**"டி பால் பிராண்ட்"**

(வைடமின் A & D என்ற ஜீவ சத்துக்கள் நிறைந்தது)

எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும்

*தயாரிப்பவர்:-* **பி டி. ராஜன் அன் கோ.,** நாகர்கோவில்

---

# Sri Paranjothi Co., Kottar.

○ எங்களிடம் ○

*கைத்தறியில் பல்விதமான துவாலை, ஜரிகை அங்க*
*வஸ்திரம், புடவை, சர்டிங் தினுசுகளும் தயாராகின்றன.*

தேவைக்கு எழுதுங்கள்.

எல்லா இடத்திற்கும் ஏஜென்றுகள் தேவை.

எங்கள் ஜோதி ஆடைகள் உத்தரவாதமும் நீடித்த உழைப்பும்
உள்ளவை.

# "வில்ஸ் பிராண்ட்"
# ஷார்க்கு லிவர் ஆயில்

ஆரோக்கியத்திற்கு இன்றியமையாதது.
காட்லிவர் ஆயிலேவிட பன்மடங்கு சிறந்தது.
வைடமின் ஏ-யும் டி-யும் சேர்ந்தது.

● போலிகளைக் கண்டு ஏமாருதீர்கள் ●

## ரோச் அண்டு கோ.,
நாகர்கோவில்.

★ பிராஞ்சு: ★

205 1/6, செட்டித்தெரு,
கொழும்பு.

---

**உயர்ந்த ரகம்!** ★ **குறைந்த விலை!!**



'கோபால் பிராண்ட்'

*ஐயா!*

*எங்களிடம் கைத்தறியில் நெய்யப் பட்டதும் நாகரீகமான பார்டர் வேலைப்பாடுகளமைந்ததுமான 40, 60 80, 100 நிர். சேலைகளும், வேஷ்டி, டவ்வல், நேரியல்ரகங்களும் சகாயமான விலைக்கு எப்பொழுதும் கிடைக்கும்.*

## தி ஸௌத் திருவாங்கூர் டெக்ஸ்டயில் ஹவுஸ்
பஜார், கோட்டாறு.

N.B:-எல்லா இடங்களிலும் பொறுப்புள்ள ஏஜெண்டுகள் தேவை.

---

## குமரி
**தமிழ் இலக்கிய மாசிகை**
ஆசிரியர் எம்.கே. பாவா

*ஆராய்ச்சிக் கட்டுரைகள், இனிய கதைகள், உணர்ச்சிக் கவிதைகள், ஆணித்தரமான அபிப்பிராயங்கள்.*
*தனிப்பிரதி அணா 4; வருட சந்தா ரூ. 3*

குமரி காரியாலயம் —————— நாகர்கோவில்

# மறுமலர்ச்சிப் பூங்காவில்

# மலர்ந்து நறுமணம்

# கமழும் மும்மலர்கள்!

தமிழ்ச் சுனை (கவிதை நூல்) ரூ. 1–0–0
(தே. ப. பெருமாள்)

கவிக்குயில் நிலையக் கதைத் தொகுதி 1–0–0
(பிரபல எழுத்தாளர்களின் கதைகள்)

முத்துக் குவியல் 1-4-0
(மறுமலர்ச்சிக் கவிஞர்களின் கவிதைகள்)

எமது அடுத்த வெளியீடு:—

## இயற்கையின் நடனம்

(கவிதை)
(தே. ப. பெருமாள்)

## விரைவில் வரும் வெளியீடுகள்

★

| | |
|---|---|
| இன்ப வசந்தம் | தங்கையின் தியாகம் |
| சர்வலோக இலக்கியம் | ஆங்கிலக் கவியமுதம் |
| சிற்பத்தின் சக்தி | இளங்கவியரங்கு |

*எமது வெளியீடுகள் சென்னை தமிழ்ப் பண்ணையிலும் தமிழ் நாட்டிலுள்ள எல்லாத் தமிழ்ப் பண்ணை ஏஜண்டுகளிடமும் கிடைக்கும்*

## கவிக் குயில் நிலையம்,

கோட்டாறு ★ திருவிதாங்கூர்

கலைத் ... காமராசன் ... அவ்வை ... நூலகம் ... தி. க. ... முதல் ...

# "வானிஷ்"

## (சர்ம-ரோக நிவாரணி)

இது படை, புழுக்கடி, கரப்பான், தேமல்,
தீப்பட்ட புண், வேனல் கட்டி, பித்த வெடிப்பு,
முகப்பரு, மூலம், கரந்திப்புண் மற்றும் எல்லாவித
சர்ம ரோகங்களுக்கும் சிறந்தவை.

1 டின் 5 அணா — பாட்டில் 8 அணா

ஸ்டாக்கிஸ்ட்

**என். திரவியம், கெமிஸ்ட்**
நாகர்கோவில்.

தயாரிப்பவர்:—
**டாக்டர் வி. எஸ். எஸ். மணி,**
காரைக்குடி.

---

சுத்தமான
பவுன் நகைகள்
வெள்ளிப் பாத்திரங்கள்
கியாரண்டியுடன்

கிடைக்குமிடம்:

## B. பொன்னம்பலம் ஆச்சாரி

நகை & கல்ச்சர் வைர வியாபாரம்

மீனாக்ஷிபுரம் ● நாகர்கோவில்

"கலையென்றால் உணர்ச்சிகளைக் கவர வேண்டும்
களிப்பூட்டி அறிவினைப் போய்க் கவ்வ வேண்டும்"
இது
நாமக்கல் கவிஞரின் வாக்கு.
இப்போன் வாக்குக்கு இலக்கியமாய் விளங்குவது

★ மதுரை ★

[illegible]

கண்ணுக்கும், செவிக்கும், மனத்திற்கும்,
ஒருங்கே விருந்தளிக்கும்
உன்னதமான உணவுச் சாலை!

— ஆம்; அதுதான்! —

புதுமை, தீவிரம், கலைமுன்னேற்றம்,
★ இவற்றின் ★
உண்மைப் பிரதிநிதிகளென
அறிஞருலகம் கூறும் கலைஞர்கள்

**T. K. S. சகோதரர்களின்**

★ கலா நிலையம் ★

இன்று
காரைக்குடியில் இருக்கிறது.

தென் இந்தியா அச்சு நிலையம், நாகர்கோவில்.